
கடவுள் வாழ்த்து

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

நீத்தார் பெருமை

ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.





# ஐந்தவித்தான் யார்?

புலவர் - மு.தெய்வநாயகம்

மெய்யப் பொருள் பதிப்பகம்

வள்ளுவர் வாழ்த்தும்

# ஐந்தவித்தான் யார்?



புலவர். மு. தெய்வநாயகம்



மெய்ப்பொருள் பதிப்பகம்

௨ஏ, அப்பாத்துரை நாயக்கர் தெரு,
அயன்புரம் : : சென்னை-23.

முதல் பதிப்பு — 1970
இரண்டாம் பதிப்பு — 1971

விலை ரூ. 1-00.

---

காணிக்கை

பிச்சை எடுப்போர் பிணிதீர எண்ணுகின்ற
பெரியோரின் திருப்பாதம் பணிந்து போற்றி
இச்சையுடன் இந்நூலைக் காணிக்கையாய்
இருகையால் தொழுதுமே படைக்கின்றேனே.

ஆசிரியர்

---

சுசி பிரிண்டர்ஸ் சென்னை-15.

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார்
எம்.ஏ. (ஆங்கிலம்) எம்.ஏ. (தமிழ்) விசாரத் (இந்தி)
எல்.டி.

## ஆற்றல் சான்ற ஆராய்ச்சி ஏடு

*"திருவள்ளுவர் எல்லா மதத்தினருக்கும் பொதுவானவர் என்னும் கருத்தையே நான் வரவேற்கிறேன். இருப்பினும் இத்தகைய ஆராய்ச்சி ஏடுகள் படிப்போரின் சிந்தனையைத் தூண்ட வல்லவையாகும்."*

புலவர் மு. தெய்வநாயகம் அவர்களின் 'திருவள்ளுவர் கிறித்தவரா?' என்னும் ஆராய்ச்சி ஏட்டுக்குக் கலையுலக எழில் ஞாயிறும் தற்போதைய தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் வழங்கியுள்ள மதிப்புரையின் இறுதி வாசகங்களே இவை.

கலைஞர் பாராட்டிய ஆசிரியரின் முந்திய ஏட்டையும், அதன் வழி மரபில் அவர் இப்பொழுது வெளியிடவிருக்கும் 'ஐந்தவித்தான் யார்?' என்ற ஆராய்ச்சி மணியுரை ஏட்டையும் நான் விருவிருப்புடன் வாசித்து எல்லையில்லா உவகை கொண்டுள்ளேன். முந்திய நூல் பதக்கமானால், அதனைத் தொங்கவிடும் மணி மாலையின் முதல் மணியாக இம் மணியுரை ஏடு விளங்குகிறது. முப்பாலேட்டின் பல பகுதிகட்கும் ஆசிரியர் இதுபோன்ற மணியுரை ஏடுகள் இயற்றி மணிப்பதக்கத்தைத் தொங்கவிடும் முழு மணி மாலையாக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

முந்திய ஏடு துணிச்சலான ஆராய்ச்சி ஏடு. ஆனால் இம்மணியுரை ஏடு அதனினும் ஆற்றல் சான்ற ஆராய்ச்சி ஏடு என்பதில் ஐயமில்லை. தருக்க நூலில் பயின்றோர், தருக்க நூல் இலக்கணத்திற்கு

இலக்கியமாக இதனினும் ஆற்றல் சான்ற ஏட்டைத் தேடிப்பெறுதல் அரிது.

முதல்வர் மு. கருணாநிதி அவர்களைப் போலவே நானும் திருவள்ளுவர் சமயங்கடந்தவர் என்றே கருதுபவன். அது மட்டுமன்று, திருவள்ளுவர் இன்று உலகிலுள்ள சமயங்கள் எல்லாவற்றிற்குமே முற்பட்டவர் என்று எனது திருக்குறள் மணிவிளக்கவுரையிலும், பிற ஆராய்ச்சி ஏடுகளிலும் நிலைநாட்டி வருபவன். ஆயினும், ஆசிரியர் முடிவை ஏற்காதவர்களும், அம்முடிபு வாசகம் ஒன்று தவிர மற்ற விளக்கங்கள் அத்தனையையும் ஏற்கத் தடை ஏதும் இல்லை. அவர் தருக்க முறையோ, ஆராய்ச்சி மனப்பான்மையுடையவர்களுக்கு விளக்கக் கருத்துடன் கலந்த ஆற்றல் சான்ற அறிவு விருந்து ஆகும். அவர் தமிழோ, தமிழ்ப் புலவர்கள் விரும்பியுண்ணத்தக்க 'காழில் கனியாக' அமைவது ஆகும்.

ஆராய்ச்சியிலும், தருக்க முறை வாதங்களிலுமே வாழ்நாட் கழித்துப் புத்தம் புதிய கருத்துக்களை வள்ளுவக் கடலில் மூழ்கி எடுத்துவரும் என் போன்றோர்க்குக் கூட புத்ததிர்ச்சி தரத்தக்க புத்துரை விளக்கங்களை ஆசிரியர் இம்மணியேட்டில் தருகிறார். இருவினை பிறவாழி, பிறவிப்பெருங்கடல் ஆகியவற்றிற்கு அவர் கூறும்பொருள் எவரும் கனவு காணாதது, அதே சமயம் வாத ஆராய்வுகளுக்குப் புறம்பானதன்று.

ஆசிரியர் முந்திய ஏட்டிலும் இந்த ஏட்டிலும் தம் வாதம் நிறுவும் நோக்குடன் 'சமணம்' 'இந்து மதம்' ஆகியவற்றின் சார்புகளைத் திறமையுடன் கண்டித்துள்ளார். இவ்வேட்டை வாசிக்கும் அச்சமயத்தார்களுக்கு நான் ஓர் எச்சரிப்புரை தர விரும்புகிறேன். ஏனெனில் நான் ஆசிரியர் கருத்தை முற்றிலும் ஏற்பவன். அதேசமயம் நான் கிறித்தவ சமயத்தார்க்கு எப்படி ஆர்வ நண்பனோ, அப்படியே அச்சமயங்களுக்கும் ஆர்வ நண்பன் ஆவேன். ஆசிரியர் கண்டிக்கும் இந்து மதமும்

சமணசமயமும் இடையிருட்கால இந்து சமயமும் இடையிருட்கால சமண சமயமுமேயன்றி, தொல் பழங்கால, பண்டைக்காலச் சமண, சைவ, வைணவ சமயங்களல்ல.கிறித்தவ சமயத்திற்கு யூத சமயம் எப்படிப் பின்னணியான பழைய ஏற்பாட்டுச் சமயமாகுமோ, அப்படியே தூய வடிவில் உலகின் எல்லா ஆத்திக சமயங்களும் அறிவுச் சமயங்களும் பழைய ஏற்பாடுகளேயாகும் என்பதை இந்த ஆராய்ச்சி ஏட்டின் ஆசிரியர் மேற்கோள்களே தெளிவாகக் காட்டும். ஏனெனில் சைவசித்தாந்தஏடுகள், சித்தர் பாடல்கள், வேதங்கள் ஆகியவற்றை அவரே ஆதார மேற்கோள்களாகக் காட்டியுள்ளார்.

சைவ சமயத்தவரான ஆசிரியர் மறைமலையடிகளாரின் ஆராய்ச்சி ஏடுகளைச் சைவரல்லாத ஆராய்ச்சியாளரும் எவ்வாறு மதித்து ஏற்க முடிகிறதோ, அவ்வாறே கிறித்தவ சமயத்தவரான இவ்வாசிரியரின் ஆராய்ச்சி ஏடும் எல்லாச் சமயத்தவரும் ஏற்கத்தக்க சிந்தனைக் கருவூலமாகவே அமைந்துள்ளது என்று துணிந்து கூறலாம்.

ஆசிரியர் ஏடுகள் பொதுவாகவும், இம்மணியுரை ஏடு சிறப்பாகவும் பண்டைத் தமிழாராய்ச்சியில் தமிழர் சமய ஆராய்ச்சியில், திருக்குறளாராய்ச்சியில் ஒரு புதிய மறுமலர்ச்சியைத் தூண்டத்தக்கதாதல் உறுதி. ஏனெனில் தம் மதம் நிறுவும் திறனில் சிறந்து விளங்கும் இவ்வாசிரியர், நடுநிலை ஆராய்ச்சித் திட்பத்திலும் ஆசிரியர் மறைமலையடிகளை நினைவூட்டத்தக்க அருஞ்சிறப்பு மிக்கவராகத் திகழ்கிறார்.

'வாய்மையே வெல்லும்' என்பது நம் தேசியக் குறிக்கோள். ஆராய்ச்சியுலகின் குறிக்கோளும் இதுவே. ஆராய்ச்சிக்கு இம்மெய்ம்மை வித்தானால், கருத்துவேற்றுமையே ஆராய்ச்சிக்கு உரமாகும். ஆசிரியர் துணிச்சலான, ஆற்றல்சான்ற வாத ஆராய்ச்சித்திறன் ஆராய்ச்சியுலகுக்கு ஒரு புது விருவிருப்பை ஊட்டும் என்று நம்புகிறேன்.

*கா. அப்பாத்துரை*

# அணிந்துரை

பொன்னு. ஆ. சத்தியசாட்சி, எம்.ஏ., எம். ஓ.எல்.
*சென்னை கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்.*

புலவர் மு. தெய்வநாயகம் அவர்கள் 'ஐந்தவித்தான் யார்?' என்ற இந்நூலைத் தமிழுலகுக்கு வழங்குகிறார்கள். புலவர் இதற்கு முன்னர் — சில திங்களுக்கு முன்னர்தான் — 'திருவள்ளுவர் கிறித்தவரா?' என்றொரு நூலை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு நூல்களும் ஒன்றிற்கொன்று தொடர்புடையவைகள்.

நான் கருதுகின்றபடி, உரையாசிரியர்களும், விழுமிய நூல்களில் புதைத்து வைக்கப்பட்டிருக்கிற செம்பொருள்களை அகழ்ந்தெடுக்கும் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டிருக்கிறவர்களும், அறிவியற்களரியில் ஆய்வு நடத்துகின்ற மேதைகளுக்கு ஒப்பானவர்கள். அவர்களுக்கு 'அறிவியல் நோக்கு' மிகமிக இன்றியமையாதது. எந்த அறிவியலாளனும் தன் ஆராய்ச்சிகளின் முடிபுகளை எவராலும் எக்காலத்திலும் மாற்ற முடியாத முடிபுகளாக முடக்கிப் போடமாட்டான். தன்னுடைய முடிபுகளைப் பிற அறிஞர்களின் நுணுக்கமான பரிசீலனைக்கு விட்டு விட்டு இவன் ஒதுங்கி நின்றுவிடுவான். குறிப்பாக, திருக்குறளின் மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் அறிவியல் நோக்கு பெரிதும் வேண்டும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னரிருந்த உரையாசிரியர்கள் கிழித்த கோடுகளைத் தாண்டக் கூடாது எனவும், தாண்டுகின்றவர்களைச் சிரிப்புக்கு இரையாக்கிவிட வேண்டும் எனவும் கொள்ளுகின்ற

மனத்தடிப்பு தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் இடையூறாக நிற்கும். இங்கே, ஆசிரியர், 'ஐந்தவித்தான்' என்ற தொடர் கிறித்து பெருமானைக் குறிக்கின்றதெனவும், 'இந்திரன்' தேவதூதர்களின் தலைவன் எனவும் கூறுகிறார். தக்க சான்றுகளுடன் தமது முடிபினை வலியுறுத்துகிறார். இந்தக் கருத்துகளை விடுப்பதோ ஏற்பதோ ஆகிய செயல்கள் தமிழ் மக்களுக்குரியனவாகும். தமிழ் அறிஞர்களுக்கு உரியனவாகும்.

இது ஓர் ஆராய்ச்சி நூலேயன்றி, சமய நூல் அன்று. இந்த நிலையில் நின்றுதான் இந்த நூலையும், இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட 'திருவள்ளுவர் கிறித்தவரா?' என்ற நூலையும் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும். இன்றெனில், சமய கோடிகளெல்லாம் தம் தெய்வம் எம் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிட ஆகிடும் நிலை திருக்குறளுக்கும் ஏற்பட்டுவிடும். ஆசிரியர், தமிழும் குறளும் தமக்குச் சொந்தம் என்ற உரிமையில், நட்பு மிக்க முறையில், நல்லதோர் உரையாடலைத் தொடங்கிவிட்டிருக்கிறார் எனவே அன்பர்கள் கொள்வார்களாக.

தமிழ் நாட்டில் மூன்றாவது சங்ககாலத்தின் இடைப்பகுதியாய் நிகழ்ந்து கொண்டிருந்த நூற்றாண்டில்தான் மத்திய தரைக்கடலின் கிழக்குக்கரையிலிருந்த நாட்டில் அண்ணல் ஏசு சிலுவையில் அறையப்பட்டு, மரணத்திற்குள்ளும் சென்று, மீண்டும் உயிருடன் எழுந்தருளி, தாம் உலகத்தை உய்யக் கொண்ட செய்தியை உலகம் எங்கும் எடுத்துரைக்க வேண்டும் என்று தமது மாணாக்கர்களுக்குக் கட்டளை கொடுத்தார். அக்காலத்தில் தான், ஏசுவின் மாணாக்கர்களுள் ஒருவராகிய தோமா என்பவர் தமிழ் நாட்டிற்கு வந்தார் என்பதாக வழிவழிச் செய்தி சொல்லப்பட்டு வருகிறது. அக்காலத்தில் நமது நாட்டிற்கும் மேற்கத்திய நாடு

களுக்கும் சிறப்பான வாணிபத் தொடர்பு இருந்து வந்திருக்கிறது. இந்நிலையில், தமிழ்நாட்டிற்கு அக்காலத்திலேயே கிறித்தவம் வந்திருத்தல் வேண்டும் என்று கருதுவதற்கு நியாயம் இருக் கிறது. எவ்வாருயினும், மிகப் பழங்காலந்தொட்டே தென்னகத்தில் கிறித்து நெறி பயிலப்பட்டு வந்திருந்திருக்கிறது என்பதற்கு, அக்காலத்தி லிருந்து இதுவரையிலும் இருக்கிற 'சீரியக் கிறித்து நெறித் திருச்சபை' ஒரு சிறந்த சான்ருகும். எனவே, கி. பி. முதல் நூற்ருண்டிலிருந்தே தமிழ கத்தில் கிறித்து நெறி, நாம் இப்போது வரையறுத் துச் சொல்ல இயலாதோர் அமைப்பில் இயங்கிக் கொண்டிருந்தது என்று துணிவதற்கு ஒரு துணிவு ஏற்படுகிறது. இத்தகையதோர் இயைபு இருக்கின்ற காரணத்தால் புலவர் மு.தெய்வநாயகம் அவர்களின் நூல் அறிஞர்கள் சற்று நின்று சிந்தனை செய்ய வேண்டிய சிறப்பினைப் பெறுகின்றது.

ஒன்றைச் சொல்லிவிட வேண்டும். திருவள்ளு வர் கிறித்து நெறியைக் கடைப்பிடித்தவர் என்ப தொரு கருத்தை உருவாக்கிவிட்டு, அதை மூலதன மாக வைத்துக்கொண்டு கிறித்து நெறியாளர்கள் ஒரு சமய வாணிகம் செய்ய முற்படுவார்கள் என்று எவரும் கருதுதல் வேண்டா. உண்மை இன்னது என்பதனைத் தெரிந்து கொள்வதற்கான முயற்சியே இந்த நூலாகும்.

புலவர் மு தெய்வநாயகம் அவர்கள் கூறுகின்ற கருத்துக்களை அருள்கூர்ந்து ஏற்றுக் கொண்டு அவருக்கு ஆதரவு தாருங்கள் என்று நான் இங்கு எவரையும் கேட்கவில்லை. ஆசிரியரும் இந்த நிலை யில்தான் நிற்கிருர் என்று நம்புகிறேன். அவர் சொல்லுவதில் உண்மை உண்டா? இல்லையா? என்பதைக் காய்தலும் உவத்தலும் அகற்றிக் காண வாருங்கள் என்றுதான் தமிழன்பர்களை அழைக் கிறேன்.

பொன்னு. ஆ. சத்தியசாட்சி

# ஐந்தவித்தான் யார்?

இக்கேள்வி திருக்குறள் ஆய்வுலகிற்குப் புதுமையன்று. அதேநேரத்தில் திருக்குறள் ஆய்வில் ஈடுபட்ட அறிஞர்கள் அத்தனை பேரையும் திணரடித்தும் வருவது.

வள்ளுவர் ஏதோ ஒரு வரலாற்றைச் சுட்டுகிறார் எனத் திருக்குறள் முழுவதிலுமே சுட்டிக் காட்டக்கூடிய இடம், இது ஒன்று மட்டுமேயாகும். மற்றவை சொல்லமைப்பின் காரணமாக ஐயப்பாட்டிற்கு இடமளிப்பதாகத் தோற்றமளிப்பினும். ஆழ்ந்து நோக்குங்கால் புராணக் கதைகளையோ, வரலாற்றையோ சுட்டவில்லை என்பது தெளிவு படுகிறது.

புராணக்கதை அல்லது வரலாருகவே இருக்க வேண்டும் என, அறிஞர் பெருமக்கள் அத்தனை பேராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட குறட்பாவே,

> **ஐந்தவித்தானாற்ற லகல்விசும்புளார் கோமான்**
> **இந்திரனே சாலுங்கரி.**

என்னும் நீத்தார் பெருமைச் செய்யுளாகும். இங்கு குறிக்கப்படும் ஐந்தவித்தான் யார்? இந்திரன் எவ்வாறு இவ்வைந்தவித்தானுக்குச் சான்று பகர்ந்தான்? ஐந்தவித்தானின் ஆற்றல் என்ன? இவை இக்குறட்பாவில் தோன்றும் வினக்கள். இவ்வினக்களுக்கு உரையாசிரியர் கொடுத்துள்ள விளக்கங்களை முதற்கண் நோக்குவோம்.

**பரிமேலழகர் :—** புலன்களிற் செல்லுகின்ற அவா ஐந்தினையும் அடக்கினனது வலிக்கு, அகன்ற வானத்திலுள்ளார் இறைவனாகிய இந்திரனே அமையுஞ்சான்று என்றவாறு.

தான் ஐந்தவியாது சாபமெய்தி நின்று அவித்தானது ஆற்றலுணர்திணுகலின், ' இந்திரனே சாலும்கரி ' என்றார்.

**மணக்குடவர் :—** நுகர்ச்சியாகிய ஐந்தினையும் துறந்தாரது வலிக்கு அகன்ற விசும்பிலுள்ளார்க்கு நாயனாகிய இந்திரனே அமையுஞ்சான்று என்றவாறு.

இந்திரன் சான்று என்றது, இவ்வுலகின்கண் மிகத்தவஞ் செய்வார் உளராயினல், அவன் தன்பதம் இழக்கின்றாகுக நடுங்குமாதலான். இது, தேவரினும் வலியன் என்றவாறு.

**காலிங்கர் :—** கீழ்ச்சொன்ன பரிசே ஐம்புலனையும் வென்றவன் சித்தவலிமைக்குப் பரந்த வானில் வாழும் தேவர்கட்கு எல்லாம் அரசனாகிய இந்திரனே அமையுஞ்சான்று என்றவாறு.

மற்று இது என் சொல்லியவாறோ எனின் கண்டுத் தன்பதங்கருதித் தவஞ்செய்யும் நீத்தார் மாட்டுத் திலோத்தமை முதலிய தெய்வமகளிரை விடுத்து, மற்று அத்தவமழித்துத் தவம் அழியாமை நிலை நிற்கையாலும், தனது பதம் விரும்பாமையாலும் தானே சான்றாய் அமையும் என்றவாறு.

**பரிதியார் :—** பொறிவழியிலே புலன் செல்லாமல் தன்வழி மனசிருப்பானுக்கு இந்திரனே சாட்சி என்றவாறு.

**சாமி சிதம்பரனார் :—** ஐவகை ஆசைகளையும் ஒழித்தவனது வல்லமைக்கு, பெரிய வானுலகில் உள்ளவர்களின் அரசனாகிய தேவேந்திரனே போதுமான சாட்சியாகும்.

துறவியின் வல்லமைக்கு இந்திரனே சாட்சி.

**தண்டபாணிப்பிள்ளை :—** புலன்கள்மீது செல்கின்ற அவா ஐந்தனையும் அடக்கியோனது, வலிமைக்கு அகன்ற வானத்தில் உள்ளாரான தேவர்களின் தலைவனாகிய இந்திரனே போதுமான சான்று.

நீத்தாரது வலிமைக்கு வானவர் தலைவனான இந்திரனே போதுமானசான்று.

அகலிகையை விரும்பி இந்திரன் கௌதமரால் சாபம் பெற்ற வரலாறு ஈண்டுச் சுட்டப்பட்டது. தான் அவாவினை அவியாமல் அவித்தவனாற் சாபம் எய்தினமையின் இந்திரன் சான்றாயினான்.

மக்களால் பூசிக்கப்படும் தேவர்கட்குத் தலைவன் என இந்திரன் பெருமை புலப்பட, விசும்புள்ளார் கோமான் என்றார். 'சாலும்கரி' என்றது முனிவரான் எய்திய சாபமும் சாபநீக்கமும் புலப்படுக்கும் யாக்கையன் இந்திரனாதலும், அவன் முனிவர்ப்பிழைத்தமையை உலகம் மறத்தற் கிடனின்றி மக்கள் மணவினைக் காலத்து மகளிர் அம்மி மிதிக்கும் ஐதிகம் நிலைபெற்றதும் கருதி.

**புலவர்குழந்தை :—** ஐம்பொறிகளையும் அடக்கினவனது வல்லமைக்கு அகன்ற வானுலகத்தார்க்குத் தலைவனாகிய இந்திரனே தக்கசான்றுவான்.

தேவர் தலைவனாகிய இந்திரன், தமிழர்களின் பெருமைகாண மனம் பொறாதவன், வலிமையும் பெருமையும் தலைமையும் புகழும் உடைய தமிழ்ப் பெரியார்களை ஒழிப்பதையே தனது வாழ்க்கைப் பயனாகக் கொண்டவன்; வரையா ஈகையால் பெரும் புகழோடு வாழ்ந்த 'மாவலி' என்னும்

தமிழரசனை வாமனன் என்பானைக் கொண்டு கொல்வித்தவன். பாண்டியர் புகழ்கண்டுபொருது பாண்டிய நாட்டின் மேல் மழையையும், கடலையும் ஏவினவன் எனப்பல கதைகள் கூறப்படுகின்றன. அன்றும் இத்தகைய பல கதைகள் கூறப்பட்டிருக்கலாம். அப்பொய்க் கதைகளைத் தெரிந்திருந்தனர் பழந்தமிழ் மக்கள். சிலர் உண்மையென நம்பியும் வந்தனர். துறந்தாரின் பெருமையைப் பலரும் எளிதில் உணரும் பொருட்டு அத்தகு இந்திரனை எடுத்துக்காட்டாகத் காட்டினர் வள்ளுவர். தமிழ் மக்களின் கொடை, புகழ்போன்ற பெருமைக்கே பொருமைப்படுகிற இந்திரன், ஒழுக்கத்து நீத்து ஐந்தவித்தார்பெருமைக்கு என்படான்? என நீத்தார் பெருமையை விளக்கியவாறு. அயல் நாடர் பொறமை கொள்ளக் கூடிய அவ்வளவு பெருமை.

ஆசிரியர் இறையனர் :- இக்குறளுக்கு, கவுதமனுல் இந்திரன் சாபம் பெற்றதைப் பரிமேலழகர் எடுத்துக் காட்டுகிருர். இந்தக்கதை வேதங்களில் வரும் கதைகளிலொன்ருகும். இந்திரன் கவுதமன் மனைவி அகலிகையோடு கூடிச்சாபமடைந்ததாகக் கூறப்பட்ட கதை யென்று வேதங்களுக்கு உரை செய்தவர்களில் சிறந்தவர் என்று கூறப்படும் திரு தயானந்தர் கூறுகின்ருர். இதையும் இதைப் போன்று பின்வரும் ஆரியநூற் கதைகளையும் படித்து, அல்லது பிறர் சொல்லக்கேட்டு, திருவள்ளுவர் அவற்றை நம்பி, தம்நூலில் எடுத்துக்காட்டாக எடுத்தாண்டுள்ளார் என்று தானே கொள்ள வேண்டும்? நேரில் கண்டு கூறியதாகக் கொள்ள எள்ளளவும் இடமில்லை. அறிவின் கண்ணுல் முன் நடந்ததை அறிந்து கூறினுர் என்று கொள்ளவும் முடியாது. அறியாமையால் பிறர் கூறியதைக் கேட்டுக் கூறினுர் என்ருல் அதுவும் ஒப்புக்கொள்ள முடியாததொன்ருகும்.

''எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு''

''எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

''பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி யவர்''

என்ற குறள்களில் யார்யார் எவ்வெவற்றைச் சொன்னாலும் எப்பொருள் எத்தன்மையில் காணப்பட்டாலும் அவற்றின் உண்மையை உணர்ந்தறிவதே சிறந்த அறிவென்று கூறுகிறார். மேலும் நூணுகி ஆராய்ந்து உணர்ந்து கேட்டுத் தெளிந்த நிறைந்த அறிவினையுடைவர், ஒன்றைப் பற்றிப் பிழைபட உணர்ந்து பிழைபாக அறிந்து தமக்கு அறியாமை உண்டாக்கக் கூடியவற்றைச் சொல்ல மாட்டார் என்றும் கூறுகிறார்.

இங்ஙனம் ஒரு பொருளின் உண்மைத் தன்மையைக்காணும் மெய்யுணர்வு மெய்யறிவைப் பற்றியும், பிழையாக உணர்ந்து பேதைமையான வற்றைச் சொல்லலாகாதென்பதைப்பற்றியும் இவ்வளவு நுட்பமாகக்கூறும் நுண்மாண் நுழைபுலமுடையவர், நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்-மண்மாண் புனைபாவையற்று'' என்று திண்ணமாகக் கூறுபவர், மேற்கண்ட வண்ணம் ஆரியக்கதைகளை நம்பி அப்படியே ஒப்புக்கொள்ளுவாரா? அறிவியல்களைத் தொகுத்து ஆக்கிய நூலில் அவைகளை எடுத்துக் கூறுவாரா? எடுத்துக் காட்டாகக் காட்டுவாரா? என்பதை அறிஞர்கள் ஆராய்ந்து அறியவேண்டும். ஆசிரியர் இவைகளை உண்மையெனக்கொண்டு உரைத்திருக்கமாட்டார் என்பது திண்ணம்.

பக் 121-122.

**பாவாணர் :-** ஐம்புலனையும் அடக்கின முனிவனது வலிமைக்கு அகன்ற வானத்துள்ள தேவர்க் கரசனாகிய வேந்தனே (இந்திரனே) போதிய சான்றாளனும்.

"தான் ஐந்தவியாது சாபமெய்தி நின்று அவித் தவனாற்றல் உணர்த்தினானாகலின், இந்திரனே சாலுங்கரி' யென்றார்" என்று பரிமேலழகர் அகலிகை சவிப்புக் கதையை இங்கெடுத்துக் காட்டியது பொருந்தாது. அவள் கணவனான கோதமன் ஐந்தவித்தானல்லன் ஆகலின்.

"இந்திரன் சான்று என்றது, இவ்வுலகின்கண் மிகத் தவஞ்செய்வார் உளவானால் அவன் தன் பதம் இழக்கின்றானாக நடுங்குமாதலான். இது தேவரினும் வலியன் என்றவாறு" என்று மணக்குடவரும்,

"ஈண்டுத் தன்பதங் கருதித் தவஞ்செய்யும் நீத்தார்............................" என்று காளிங்கரும் கூறிய விளக்கம் ஒருவாறு பொருந்தும்.

ஆயினும் ஆசிரியர் கருதிய கதை ஒன்றிருத்தல் வேண்டும். அது இன்று அறியப் படவில்லை.

**பன்மொழிப்புலவர் :-** திருக்குறள் முழுவதிலும் திருவள்ளுவர் மேற்கொள்ளும் பண்பு நோக்கினால், அவர் தம்பண்பு சுட்டியன்றி எந்த மரபும் குறிப் பதில்லை என்று காணலாம், ஆகவே சான்று, புராணமரபு சுட்டிற்று என்று கொண்டாலும், அப்புராணமரபு அவர்காலப் பழமைக்கொத்த பழமையுடைதாகவும் அவர் பண்பைச் சுட்டிக் காட்டுவதாவும் அமைதல்வேண்டும்.

திருவள்ளுவர் பொருள் இது என்று கட்டாயமாகக் கூறமுடியாமலே, இதுவாய் இருக்கக்கூடும் என்ற நிலையினை யேனும் உடைய புராணமரபு எது என்பது ஆராயத்தக்கது.

“தான் ஐந்தவியாது.........என்றார்” என்பது பரிமேலழகர் விளக்கவுரை. இது அகலிகையுடன் தகாத் தொடர்பு நாடிக் கெட்டழிந்த இந்திரன்மீது கோதம முனிவன் சாபமிட்ட கதை குறித்தது. இக்கதை கம்ப இராமாயணத்திலும் வால்மீகி இராமாயணத்திலும் மிகச்சிறு வேறுபாடுகளுடன் விளக்கப்பட்டுள்ளது.

இக்கதை கம்ப இராமாயணத்திற்கு முற்பட்ட கதை என்பதில் ஐயமில்லை. ஆனால் வால்மீகி இராமாயண வகையில் இத்தகைய உறுதி கூற முடியாது. ஏனெனில் அதன் காலம் தெளிவற்றது. அந்த ஏடு பலர் கைவரிசைகளால் உருவானது என்பர் சமஸ்கிருத ஆராய்ச்சி அறிஞர். அத்துடன் கதையின் பண்பும் திருவள்ளுவர் பண்பும் ஒத்துவராதவை – சாபப்பண்பே அவர் ஏற்காத ஒன்று. மேலும் கோதமன் இந்திரனைப் பழித்த கதையைத் திருவள்ளுவர் குறித்தால், கோதமன் பெயர்கூறாது இந்திரன் பெயர் கூறத்தேவையில்லை. இக்காலக் கதையில் ஐந்தவித்தான் ஆகக்கூடியவன் கோதமனே, இந்திரன் அல்லன்.

“இந்திரன் சான்று என்றது...........வலியன் என்றது” என்பர் மணக்குடவர்.

இங்கும் இந்திரன் மீது பழியில்லாமல் இல்லை.

‘ஈண்டுத் தன்பதம்...........தானே சான்றாய் அமையும்’ என்பது காளிங்கர் விளக்கம்.

இதிலும் இந்திரன் பழிப்புச் சிறிதே உண்டு. 'பஞ்சேந்திரியங்களையும் அடக்கித் தவம்பூண்டு நூறுயாகங்களைச் செய்கிறவனுக்கு இந்திரபதவி கிடைக்கும். அதன்மேல் அவன் சங்கநிதி, பதுமநிதி, காமதேனு, கற்பகவிருட்சம் என்ற செல்வங்களுக்கும்; இந்திராணி, அரம்பையர் முதலான பெண்களின் இன்பத்திற்கும் அதிபதியாகிறான். ஆதலால் பிறப்பறுத்தல், மோட்சம், முத்தி என்ற நோக்கமே இல்லாமலும் ... மேலான செல்வத்தையும் இன்பங்களையும் அடையலாம்' என்பது கவிஞர் இராமலிங்கனார் விளக்கம்.

இவ்வுரையாசிரியர் விளக்கங்களுள், குறட்பாவின் சொற் பொருளுக்கேற்ற குறிப்பாக அமைவது பரிமேலழகர் உரையே என்னலாம். ஆனால், அதுகூட இந்திரனை எதிர்மறைச்சான்றாக்குகிறது. கதை திருவள்ளுவர் சுட்டிக்காட்டத்தக்க பண்புடைய கதையுமன்று; அவர்காலத்துக்குரிய பழமையோ பண்போ உடைய கதையுமன்று.

காலத்துக்கேற்ற பண்புகாத்த பொருள் கவிஞர் இராமலிங்கனாரதே என்னலாம். தவம் செய்பவர் இந்திர பதவியடைவர் என்ற புத்த சமண மரபையும், நூறுயாகம் செய்பவர் இந்திரனாவர் என்ற வேத மரபையும் அது ஒருங்கு இட்டுக் குழப்புகிறது. அதேசமயம் வள்ளுவர் குறட்பாவில் உச்ச உயர் சிறப்புத் தொனியுடன் கூறப்படும் ஆற்றலை அவர் இரண்டாம்படியாகக் கொள்கிறார். ஏனெனில் அவரே சுட்டுகிறபடி, முத்தி உயர்படி இன்பம், இந்திரன் இன்பம் மிகத்தாழ்ந்த படி ஆகும்.

மணக்குடவர், காலிங்கர், கவிஞர் இராமலிங்கனார் ஆகியோர் உரையூடாகத் தெரியவரும் சமணபுத்த மரபுக் கதையே, புராணக்கதைகளுள்

திருவள்ளுவர் பண்புக்குமிகத்துணுக்கமானதுஎன்ன லாம். ஆனல், திருவள்ளுவர் காலப் புராண மரபுக் கதை இதனினும் மேம்பட்டு இம்மணி விளக்க வுரை நோக்கியதாக இருந்திருக்க வேண்டும் என்னலாம் — காலமும் வருங்கால ஆராய்ச்சி களும்தான் ஒருவேளை அப்பழங்கால மரபை நமக்குக் கட்புலப்படுத்த வேண்டும் என்னலாம்.

மேலே நாம் காணும் உரையாசிரியர் கருத்துக் களிலிருந்து இக்குறட்பாவுக்கு விளக்கமாகக் கூறப் படும் கௌதமர் கதை பொருந்த வில்லை என்ப துடன், வள்ளுவர் சுட்டும் வரலாறு என்ன? என்ற கேள்விக்கு எவரும் சரியான விடை கொடுக்க முடியவில்லை எனபதும் புலனுகிறது. தங்களால் காணமுடியா அவ்வரலாற்றை அவர்கள் வருங்சால ஆய்வுக்கு விட்டுச்செல்லுகின்றனர்.

இதிலிருந்து ஒன்றுமட்டும் மிகவும் தெளிவாகத் தெரிகிறது. இதுவரை உரையாசிரியர்கள் வள்ளுவரைச் சரியான கோணத்தில், அதாவது வள்ளுவரின் உள்ளத்தை உள்ளபடியே காண முடியவில்லை என்பதும், அவர்கள் நோக்கிய கோணத்தில் குறைபாடு உண்டு என் பதும் வெள்ளிடை மலையாகிறது. ஆகவேதான் அவ்வறிஞர் பெருமக்களுள் நுண்மாண் நுழை புல முடையோரிற் சிலர் அக்குறைபாட்டை நீக்கும் பொறுப்பை வருங்கால ஆய்வுக்கு விடுகின்றனர்.

ஆகவே திருக்குறள் ஆராயச்சியில் ஐந்த வித்தான் யார்? என்னும் இக்கேள்வி ஒரு புதிய திருப்பத்திற்கு அடிகோலியாய் அமைந்துள்ள சிறப்பைப் பெறுகிறது.

இப்போது அச்சிறப்புப் பெற்ற ஆய்வில் புகும் நாம் 'ஐந்தவித்தான்' என்பதிலுள்ள ஐந்து என் பதை வள்ளுவர் தம் நூலுள் எவ்வாறு கூறிச் செல்லுகிருர் என்பதை நோக்குவோம்.

# ஐந்து

ஐந்து என்பது இங்கு மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறி மூலம் அனுபவிக் கும் ஐம்புலன்களையும் குறித்துநிற்கின்றது. உலகில் வாழும் உயிர்கள் யாவும் இவ்வைம்புலன் வழி யாகவே தங்கள் வினைகளை நடத்துகின்றன. இவ் வைம்புலன் வழியாகவே இன்ப துன்பங்களையும் அனுபவிக்கின்றன. உலகின் கண் நின்று நிலவும் எல்லா உயிர்களும் இவ்வைம்புலன்களையும் உடை யனவல்ல. உயிர்கள் ஒரு புலன் முதல் ஐம்புலன் ஈருகப் பகுக்கப்பட்டிருக்கின்றன. மனிதன் இப் புலன் வழிச்செயலாற்றுவதற்கும் பிறஉயிர்கள் செய லாற்றுவதற்கும் மிக்க வேறுபாடு உண்டு. மற்ற உயிர்கள் இப்புலன்வழிச்செயலாற்றுவது பரம்பரை பரம்பரையாக மாருமல் ஒன்றியைந்து நடை பெற்றுவருகிறது. ஓரினத்தைச் சேர்ந்தஉயிர்களின் செயல், வெவ்வேறு காலங்களிலும், ஒரே விதமா கவே இருந்து வருகிறது. ஆனல் பகுத்தறி வுடைய மனிதனின் செயல் மட்டுமே, காலத் திற்குக் காலம், இடத்திற்கு இடம், மனித னுக்கு மனிதன் வேறுபட்டு வருகிறது.

ஐம்புலனையும் ஒருங்கே சேர்த்துக் குறிக்குங் கால், அது, அவ்வைம்புலனையும் உடைய முழு மனிதனையே குறித்து நிற்கின்றது. ஒருவன் ப்பிஇ

புலனாலும் இன்பம் துய்க்கின்றான் எனின், அதுவே அவன் துய்க்கும் இன்பங்களுள் நிறைவானது. ஏதாவது ஒரு புலன் வழியாக மட்டுமே இன்பம் துய்ப்பதாகக் கொண்டால், அவ்வின்பம் துய்க்குங் காலை, ஏனைய நான்கு புலன்களும் வாளாவிருந்து இன்பத்தை உணராக் காரணத்தால், அவ்வின்பம் குறைவுபட்டதாகிறது. அப்படியானால் ஐம்புல இன்பமே முழுமை பெற்ற இன்பம் என்றாகிறது. எவ்வாறு ஐம்புலன் வழியாகவும்துய்க்கும் இன்பமே முழு இன்பம் எனக்கொள்ளப்படுகிறதோ, அவ்வாறே, ஐம்புலன் வழியாக வந்து, ஐம்புலனும் துய்க்கும் துன்பமே முழுத் துன்பமும் ஆகிறது. ஐம்புலனும் துன்புறுகிறான் என்றால், அவன் முழுமையாகத் துன்புறுகிறான் - அதாவது, துன்பமே உருவானான்-என்பதே பொருளாகிறது.

மேலே நாம் கண்டவைகளிலிருந்து ஐம்புல இன்பமே முழு இன்பம் எனவும், ஐம்புலத் துன்பமே முழுத் துன்பம் எனவும் அறிகிறோம்.

## முறை

இனி வள்ளுவர் இவ்வைம்புலனையும் பற்றிக் கூறியிருப்பவைகளை நோக்குவோம்.

ஐம்புலனைப் பற்றி வள்ளுவர் தம் குறட்பாவினுள் பல இடங்களில் கூறியுள்ளார். அவர் கூறியுள்ள குறட்பாக்களை நாம் கூர்ந்து நோக்கின், அவை ஒருமுறைப்படி வைக்கப்பட்டிருப்பது விளங்கித் தோன்றும். அவர் நூலின் அமைப்பு முறையை நோக்குங்கால், இறைவனில் தொடங்கி இன்பத்தில் முடிந்திருப்பதைக் காணலாம். அவர் காட்டும் இன்பம், இவ்வுலக இன்பமாம் சிற்றின்ப

மாய்த் தோன்றினும், பேரின்பத்திற்கு வழி நடத்துவது என்பது—இன்பம் அனுபவிக்கும் ஐம்புலனையும் பற்றிய அவரது கூற்றுக்களால் விளங்கித் தோன்றுகிறது. எவ்வாறு எனில், குறட்பாவின் இறுதியில் இருக்கும் இன்பத்துப் பாலின் கண், ஐம்புலனுக்கும் ஒருங்கே இன்பம் கிடைக்கும் ஏதுவை விளக்கி, இடத்தையும் விளக்கிப், படிப் படியாக, நூலின் பின்னிருந்து முன் வர வர அதன் படிகளை உயர்த்திக் கடைசியாக, மனிதன் அடையும் உச்சிப் படியாம் உன்னத நிலையை, நீத்தார் பெருமையில் கூறி, இறுதியில் எல்லாவற்றிற்கும் மேலாக விளங்கும், இறைவனில் அதை முற்றுப் படுத்துகின்றார்.

சாதாரணமாக நோக்குங்கால் ஐம்புலனைப் பற்றிய இந்த வரிசை முறை நமக்குத் தோன்றா விடினும், தொகுத்துப் பார்க்குங்கால் அதன் அமைப்பு முறையையும், ஏற்றத்தினையும் வியக்காமல் இருக்க முடியவில்லை. இப்புலமை வள்ளுவர்பால் கருவின் திருவாய் அமைந்திருத்தலாலன்றோ, அவர் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் என அழைக்கப்படுகின்றார்?

இனி ஐம்புலன்களையும் பற்றி வள்ளுவர் கூறியிருக்கும் கருததுக்களை முறைப்படி நோக்குவோம்.

## இன்பம்

இன்பம் அனுபவிக்கத் துடித்தல் உயிர்களின் இயற்கை. உயிர்கள் தமக்கு வரும் எவ்வளவு துன்பங்களையும் தாங்கி உயிர்வாழுவதன் காரணம், இன்பத்தை எதிர்நோக்கியே. இன்பத்தைத் துய்க்கும்

வாயில்கள் புலன்களே. ஐம்புலன்களின் வழியாக மனிதன் ஐவகை இன்பங்களையும் அனுபவிக்கிறான். தீஞ்சுவைப் பொருட்களை உண்ணுவதன் மூலம் வாய் இன்பத்தையும், இனிய இசையைக் கேட்பதன் மூலம் செவி இன்பத்தையும், சிறப்புமிகு நறுமணத்தை நுகர்வதன் மூலம் மூக்கின்பத்தையும் கண்ணுக்கினிய காட்சிகளைக் காணுவதன் மூலம் கண்ணின்பத்தையும், விரும்பும் பொருட்களை உடல் தீண்டுவதன் மூலம் மெய்யின்பத்தையும் மனிதன் அனுபவிக்கிறான்.

பற்பல பொருட்களிலும் இவ்வின்பம் தனித் தனியே அடங்கியிருத்தலை அறிந்து, ஒவ்வொன்றையும் தனித் தனியே நுட்பமாக அனுபவிக்கின்றான். ஐம்புல இன்பத்தையும் அடைந்து மகிழ்கிறான். புலன்கள் இவ்வின்பத்தைத் துய்க்காவிடில் அவ் வாழ்வு பாலைவனமாகக் காட்சியளிக்கிறது. ஆகவே உலகில் பிறந்த ஒவ்வொருவனும் ஐம்புல இன்பத்தையும் அவாவுகிறான். அதற்காக அவன் அல்லும் பகலும் ஓடுகிறான்.

ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொரு வகை இன்பம் மட்டுமே இருத்தலை நோக்கும் மனிதன், அதினின்றும் இன்னும் அதிக இன்பம் அடையக் கருதி, ஒன்றுக்கதிகமான புலனுக்குரிய இன்பம் ஒரு பொருளிலேயே உண்டா? என நோக்குகிறான்; இடத்தை நாடுகிறான். இடத்தையும் காணுகிறான். அது கிடைக்கும் இடம் உலகத்தில் வேறு எங்கும் இல்லை; தன்னைப் போலொத்த, தன் இனமான, ஐம்புலனோடும், ஆறாவது அறிவோடும் கூடிய, தன்னோடு வாழும் பெண்ணிடமே அவ்வரிய இன்பப் படையல் இருப்பதை உணருகிறான். அதற்கீடான இன்பச் செறிவு இவ்வுலகில் வேறு

எவ்விடத்தும், எப்பொருளிலும் எக்காலத்தும் இல்லை என்பது இவனுக்குத் தெளிவாகிறது. ஐம்புல இன்பமும் ஒருங்கே அமைந்து, இவ்வுலக இன்பங்களிலெல்லாம் சிறந்து, உயர்ந்து, விளங்கும் இன்பத்தை, இன்பத்துப் பாலின் கண்ணே விளக்கி விரிக்கின்றார் வள்ளுவர்.

> கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே உள

கண்ணாற் கண்டும், செவியாற் கேட்டும், நாவால் உண்டும், மூக்கால் முகர்ந்தும், மெய்யால் தீண்டியும் அனுபவிக்கப்படும் ஐம்புலனும் பெண்ணிடமே உண்டு. 'கண்ணே உள' என்பதிலுள்ள 'ஏகாரம்' தேற்றேகாரமாய், வேறு எங்கும் இல்லை; இங்கேயே உண்டு என விளக்குகின்றது.

வேறு வேறு காலங்களில் வேறு வேறு பொருட்களால் அனுபவிக்கப்படுவன ஏககாலத்து இவள் கண்ணே அனுபவிக்கப்பட்டன. ஆகவேதான் இவ்வுலக இன்பத்தை அனுபவிக்கத் துடிக்கும் அத்தனைபேருக்கும், இவ்வின்பமே உயர்வானதாகவும் ஏன் ஒப்புயர்வற்றதாகவும் விளங்குகிறது.

## உணர்வு

ஐம்புல இன்பத்தையும் மனிதன் நன்கு அனுபவிக்கிறான். இன்பம் அடையும் நிலையிலேயே, அவ்வின்பம் நீடித்துநிற்க விரும்புகிறான். புலன் வழியே சென்று அடையும் ஐம்புல இன்பம் நீடித்து நிலையாமையை உணர வேண்டிய வருகிறான். அவன் அந்நிலையாமையை உணரும் நிலையில் அவனது எண்ணம் ஐம்புல இன்பத்தையும் புலன் வழியே

சென்று அனுபவிக்கும் நிலையைத் தாண்டுகிறது. தான் விரும்பும் இன்பம், இவ்வாறு இயற்கை நிலையில் மாத்திரம் கிடைக்கக் கூடியதன்று. இதிலே கிடைப்பது இன்பமே என்றாலுங்கூட இது நிறைவானதன்று; குறைவானதே. சிறிது பொழுதே இன்பம் பயப்பது. ஆகவே இது சிற்றின்பத்தின் பாற்படுவது என்பதை உணருகிறான். உணர்ச்சி, நீடித்த சிந்தனையைத் தூண்டுகிறது. இச்சிற்றின்ப நிலையையும் அதன் முடிவில், அது பயக்கும் துன்ப நிலைகளையும் உணருகிறான். துன்பத்தொடர்ச்சியின் தொடக்கமாக, இவனைக்கவர்ந்திழுக்கும் ஒரு மாயப் பொறியே இவ்வின்பம், என்ற உணர்வு இவனுக்குத் தோன்றுகிறது. தோன்றவே ''துன்பத்தில் முற்றுப் பெறாத இன்பம், அதுவும் நீடித்த இன்பம் இருந்தால் அதை அனுபவிக்கலாமே; அப்படி ஒன்று இருக்குமானால் அதை அடைவதே சிறப்பு'' என்ற உணர்வும் இவனுக்கு மேலோங்குகிறது. மேலோங்கவே துன்பத்தின் தொடக்கமாகவே இருக்கும் இவ்வின்பத்தை, அதுவும் அற்பகால இன்பத்தை, அதைத் தான் தேடிச் சென்ற நிலை மாறி, அதுவே தன்னை நாடி வந்தாலும் வேண்டாம் எனக் கூறக்கூடிய மன உணர்வு அவனுக்குப்பளிச் சிடுகிறது. இப்பொழுது அவன் முன்பு இருந்த நிலையாம் புலன் வழியே சென்று, ஐம்புல இன்பத்தை அடையும் நிலையிலிருந்து வேற்று உணர்வினனாகி விளங்குகிறான்.

ஆனாலும் இதிலே இரண்டு நிலைகள் இருப்பதை அவன் இன்னும் உணர்ந்தானில்லை; அவ்விரண்டு நிலையாவன :-

1. அழியாப் பேரின்ப நிலை யொன்றுண்டு என்று உணர்ந்து, அதை அடையும்பொருட்டாக, அழியும் சிற்றின்பத்தை விடுதலாம் முதல் படியை

அடைதல். அதாவது, மேலானதை எதிர் நோக்கி அதை அடையும் படியாகக் கீழானதை விட்டு முதல் படியில் கால் வைத்ததால்.

2. இன்பத்தின் சிறுமையையும், அதன் முடிவில் ஏற்படும் துன்ப நிலைகளையும் உணர்ந்து அவ்வின்பத்தின்மேல், அதன் குறைவு காரணமாக ஏற்பட்ட வெறுப்பின் காரணத்தாலும், அதன் பின் விளைவாம் துன்பம் கண்டு துவண்ட நிலையிலும் அதை விடுதலாகிய முதல் படியை அடைதல். அதாவது கீழானதை நோக்கி அதை விடுதலாகிய முதற்படியில் கால் வைத்தல்.

இவ்விரண்டு மனோ நிலையும் சிற்றின்ப விடுப்பாகிய முதல் படியாம், ஒரே படியில் நின்றாலுங் கூட, இரண்டுக்கும் உள்ள வேற்றுமை மிக மிக அதிகம் ஆகும்.

முன்னது மேலானதை நோக்குதலாகிய ஒரு சிறந்த குறிக்கோளைக் கொண்டது. ஆனால் பின்னதோ கீழானதை நோக்கும் நிலை. முன்னவன் உள்ளத்தில் சிறந்ததை அடையப்போகும் உள்ளக் களிப்பும், பின்னவனிடம் கீழானதில் இருக்கும் துன்பத்தை எண்ணும் துன்ப உணர்வுமே மேலோங்கி இருக்கிறது.

ஒரே படியில் இருக்கும் இருவருள்ளும் ஒருவன் சிறந்த துணையையுடையவன். மற்றவன் அப்படியல்ல. முன்னவன் நோக்கம் மேலானதன் மீது ஆர்வம். பின்னவன் நோக்கம் கீழானதன் மீது வெறுப்பு.

ஆகவேதரன் கீழானதன் மீது வெறுப்பாம் ஐம்புல உணர்வு தோன்றினாலுங்கூட, மேலான

பேரின்பநிலையாம் மெய்ப்பொருளைப் பற்றியஉணர்வு இல்லையேல் அதனுல் பயனில்லை.

> ' ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
> மெய்யுணர்வில்லா தவர்க்கு'' -354

இவ்விரு நிலையையும் ஆத்திக நாத்திக நிலையோடு ஒப்பிடலாம். ஆத்திகன் முதல் படியில் கால் வைப்பதன் நோக்கம் மேலானதை நாடி இன்னும் பலபடிகளைக்கடந்து மெய்ப்பொருளாம் இறைவனை அடைவது.

ஆனுல் நாத்திகன் முதல் படியில் கால்வைப்பதன் நோக்கமோ கீழான தீமையிலிருந்து விலக எண்ணுவதேயன்றி மேலான நன்மையை அடைவதல்ல. ஆகவேதான் பின்வரும் பல நிலைகளாம் படிகளில் நாத்திகநண்பன் பின்னடைந்தவனுகவும் தோல்விகண்டவனுகவும் விளங்குகிருன். ஆத்திகன் வெற்றியடைந்து இலக்கை அடைகிருன்.

## ஆடல்

ஐம்புலனைப் பற்றிச்சரியான உணர்வு ஏற்பட்டவுடன் புலன்வழியிலிருந்து மாறுபட முயலுகிருன். மாறு படும்எண்ணம் தோன்றுவது முதல்படி. அவ்வெண்ணம் தோன்றியவுடனேயே அவன் அதில் வெற்றி பெற்ருன் எனக் கூறமுடியாது, உணர்வு தோன்றுவது வேறு. உணர்வைச் செயல் படுத்தி வெற்றி பெறுவது வேறு. வெற்றிபெறுவதற்கு முதற் படி உணர்வேயாயினும், அவ்வுணர்வே வெற்றியாகிவிடமுடியாது. நம் நாடு விடுதலை பெற வேண்டும் என்றஎண்ணம் மக்கள் மனத்தில்தோன்றியவுடன், அவர்கள் விடுதலை பெற்றவர்களாகி

விடமுடியாது. ஆனால், உணர்வே இல்லா நிலையிலிருந்து இப்போது ஒருபடி உயர்ந்திருக்கிறார்கள். இனி அவர்களுக்காகக் காத்திருப்பது போராட்டம். அந்தப் போராட்டத்தில் வெற்றிபெற்றால்தான் உணர்வுவந்ததன்பயன்பூரணப்படுகிறது. போராட்டமும் அவ்வளவு எளிதானதன்று. நினைத்தவுடன் கிடைத்து விடுவதல்ல வெற்றி. தியாகஉள்ளமும், சரியான குறிக் கோளும் மனத்திட்பமும் இதற்குத் தேவை.

புறப் போராட்டத்தில் ஈடுபடுவது எளிது. மிக எளிது. உயிரையுங் கூட எளிதாகக்கொடுத்து விடலாம் நல்ல காரியத்திற்காக. ஆனால், அகப் போராட்டத்தில் ஈடுபடுவது அவ்வளவு எளிதானதன்று. அதில்வெற்றிபெறுதலும்அவ்வாறே. இதுவரை ஐம்புலனுடன் இருந்த தொடர்பு அத்தனையையும் கொஞ்சமும் பற்றின்றிவிட்டு விடல் வேண்டும். தொடர் பிருக்குமானால் அத்தொடர்பு வெற்றியைத் தள்ளிவிடும்கருவியாகிவிடும். ஆகவே, மிக்க உறுதியுடன் ஐம்புலனையும் எதிர்த்துப் போராடி வெற்றி பெற வேண்டும். அதற்குத் துணையாக, அதனுடன் இருந்த தொடர்பு அத்தனையையும் துண்டித்துக் கொள்ளவேண்டும்.

"அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு" — 343

ஆகவே, ஐம்புலன் இன்பம் என்ற அடிநிலையில் இருந்து அதைப்பற்றிச் சரியான உணர்வடைதல் முதல்படி [உணர்வடைவதினுள் மெய்ப் பொருளை உணர்ந்த நிலையே உயர்ந்துவிளங்குகிறது.]

உணர்வடைந்த பின் அதை வெற்றி கொள்ள எண்ணுதல் இரண்டாம்படி. [இதற்கு அனுகூலமாக ஐம்புலனுடன் இருந்த தொடர்பை விட்டு விடல் வேண்டும்.]

அதன் பின்னர் ஐம்புலனுடனும் போராடுதல் மூன்றும்படி. இப்போரிலே வெற்றி பெறுதல் நான்காம்படி.

## அடக்கல்

அடுத்து, வெற்றி பெற்றால் மாத்திரம் போதுமா? என்றால், இல்லை என்றுதான் பதில்கூற முடியும். அழிப்பது வேறு. வெற்றி கொள்வது வேறு. ஐம்புலன்களுடன் நிகழ்த்திய போரில் ஐம்புலனையும் அழித்து ஒழித்து விடவில்லை. கிடைத்திருப்பது வெற்றியே. கிடைத்திருக்கும் வெற்றியும் சிறந்ததாக, நீடிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

மகா அலெக்சாந்தர் போரிலே புருடோத்தமனை வெற்றி கொண்டார். ஆனால் அடிபணிய வைக்க முடியவில்லை. புருடோத்தமனும் தோல்வியுற்றாலுங்கூட அடிபணிந்து விடவில்லை. ஆகவே வெற்றி வேறு, அடக்கல் வேறு. அடக்குதலின் முதற்படியே வெற்றியானாலுங்கூட, வெற்றி வேறு அடக்கல் வேறு.

இந்நிலையில் ஐம்புலனையும் ஒரு நிலையில் வெற்றி கண்டால் மாத்திரம் போதாது. அது என்றும் அடங்கியிருக்குமாறு, அவ்வெற்றி நீடித்ததாக இருக்குமாறு, அதை நமக்குக் கீழ் அடக்கி வைக்க வேண்டும். அவை, தம் விருப்பத்தில் செயல்படாது, நம் விருப்பத்தில் செயல்படவேண்டும்.

அடக்கல்—அடக்கிவைத்திருத்தல்—நீடித்த வெற்றி

ஆமை எவ்வாறு தன் உறுப்புகளைத் தன் விருப்பத்திற்கிணங்க அடக்கி, தனது ஓட்டிற்குள் வைத்துக்கொள்ளுகிறதோ அவ்வாறே, ஐம்புலனை யும் நாம் அடக்கி, நமக்குக் கீழ்ப் படியச் செய்ய வேண்டும் ஐம்புலனுக்கும் இதுவரை நாம் அடி மையாயிருந்த நிலைமாறி, இப்போது ஐம்புலனும் நமக்கு அடிமையாகிறது. இவ்வாறு அடிமைப் பட்டு ஐலம்புலனும் அடங்கும்பொழுது, நம் நிலை உயருகிறது. இதுவரை இருந்த நிலையை விட இப்போது நம் நிலை பாதுகாப்பாகிறது. ஏன்? பகை வனே நமது அடிமை; நம் ஏவல் செய்வோன்.

ஆகவே, இப்பாதுகாப்பான நிலை தற்காலிக மானதல்ல; நம் வாழ்வில் எழுகின்ற பல நிலைகளி லும் அது நமக்கு நிரந்தரப் பாதுகாப்பாகிறது.

*ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்*
*எழுமையும் ஏமாப்புடைத்து.—126*

(பொ—ள்:-ஆமைபோல் ஒருவன் தன் வாழ்வின் ஒரு நிலையின் கண் ஐம்பொறிகளையும் அடக்க வல்லவ னயின், அல்வன்மை அவனுக்கு அவன் வாழ்வின் கண் எழுகின்ற நிலைகள் தோறும் பாதுகாப் புடைத்து.)

இப்போது வெற்றி பெறுதலாகிய நான்காம்படி யிலிருந்து பணியச் செய்தலாம் அடக்கலாகிய ஐந் தாம்படிக்கு வந்துள்ளான். இந்த ஐந்தாம்படிக்கு மனிதன் வந்தபின், இந்த நிலை அவன் வாழ்நாள் முழுவதற்கும் பாதுகாப்பாக அமைகிறது. இப் பொழுது அவன், தன் நிலையில் வலுப்பட்டவனாக ஆகிறான்.

## வகைதேர்தல்

மனிதன் தன் நிலையில் மாத்திரம் வலுப்பட்ட வனாக இருந்தால் போதுமா? அவன் தானும் வலுப் பட்டு மற்றவர்களையும் அந்நிலைக்குக் கொண்டு வரக் கூடியவனாகத் திகழவேண்டும். மற்றவர்களுக்குத் தான் முன் மாதிரியாகத் திகழ்ந்து, மற்றவர்கள் தன்னைப் பின்பற்றக்கூடிய ஆற்றலைப் பெற்றுத் திகழ வேண்டும். இதுவரை கூறிவந்த நிலைக்கும், இனிக் கூறப்புகும் நிலைக்கும் முக்கிய வேறுபாடு உள்ளது. இதுவரை கூறிவந்த நிலைகள் தன் ஒருவனையே சம்மந்தப்பட்டவை. தன்னளவில் வலுப் பட்டுக்கொள்வதற்கு ஏதுவானவை. ஆகவே அவை களை முறையே புணர்ச்சி மகிழ்தல், துறவு, அடக்கல் ஆகிய அதிகாரங்களுள் கூறினார்.

ஆனால் இனி வரப்போகிறவை வலுப்பட்ட நிலையில் மற்றவர்களுக்குப் பயன்படுவதால், நீத்தார் பெருமையிலும், மிகவும் சிறந்த நிலை இறைவனுக்கே யுரிய நிலையாகையால் இறை வணக்கத்திலும் வைத்தார். ஐம்புலனையும் பணியச் செய்தல் தன்னளவில் நன்மை பயப்பது. ஐம்புலன் வழியாக வருகின்ற ஐம்புலநுகர்ச்சியாம், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவைகளிலே உள்ள பாகுபாடுகளை உணர்தல் இன்னும் மேலா னது, இதுவே மற்றவர்களைத் தன்பால் இழுக்கக் கூடியது. உலகத்திற்கு நன்மை பயக்கக்கூடியது. இங்கே ஐம்புலன் முழுவதும் அடங்கிய நிலையில் ஐம்புல நுகர்ச்சியிலும் இழிந்தவை மறைந்து, சிறந்தவை செயல்படத் தொடங்கின. இழிந்த செயல்களையே செய்து வந்தவைகளைச் சிறந்த செயல்களைச் செய்வதற்கும் பயன்படுத்த முடியும்

என அறியப்படுகிறது. இவ்வகையைத் தெரிந்தவன் கண்ணே உலகம் உள்ளது.

"சுவைஒளி ஊறுஓசை நாற்றம் என்றைந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு..."

## காத்தல்

தன் நிலையில் வலுப்பட்டவன் ஐம்புல நுகர்ச்சியின் பாகுபாட்டைத் தெரிந்து, உலகிற்குத்தான் முன்மாதிரியாகத் திகழும் நிலையை அடைகிறான். உலகத்திற்கு முன் மாதிரியாகத் திகழும் நிலை மாத்திரம் போதுமா என்றால் போதாது என்று தான் கூற முடியும். ஏன்? இலக்கு இது மாத்திரமல்ல. மறுமையின்பமாம், பேரின்ப வீட்டுலகையடைதலே. இவன் அடைவது மாத்திரம் அல்ல, மற்றவர்களும் அடைவதற்கு ஏதுவானவனாகவும் திகழுகிறான். ஒரு விதை பல விதைகளைத் தோற்றுவிப்பதைப் போன்று இவன் வீட்டுலக வித்தாகத் திகழவேண்டும். அவ்வாறுவிளங்குவதற்குத் தேவையானது என்ன? ஐம்புல நுகர்ச்சியின் வகை தெரிதல் மாத்திரமன்று. வகைதெரிந்து ஆளுதல் ஆகும். அடக்கல் ஐந்தாம்படி. அதன்வகை தெரிதல் ஆறும்படி. வகைதெரிந்து கட்டிக்காத்து அரசாட்சி புரிதல் ஏழாம்படி. இவ்வேழாம்படியே வீட்டுலக வாழ்வின் வித்தாகும் நிலை. இதை ஓர் உதாரணத்தின் வாயிலாக விளக்கினால், சோழன் கரிகாலனின் இலங்கைப் படையெடுப்பைக் கூறலாம்.

இலங்கை வாழ் மக்கள் தமிழர்களோடு தொடர்புடையவர்கள். தமிழ் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டியவர்கள். ஆனால் அவர்கள் நன்மை செய்வதற்கு மாறாகத் தமிழர்களிடம் பகைமை பூண்டி

ரூத்தலையும் தமிழர்களுக்குத் தீங்கிழைக்கும் நிலையையும் முதற்கண் உணருகிறான். உணரவே இரண்டாம்படியாக அவர்களின் ஆதிக்கத்தை ஒழிக்கும் வழி அவர்களுடன் போராடி வெற்றி பெறலே என எண்ணுகிறான். எண்ணியதைச் செயல்படுத்த மூன்றாம்படியாக அவர்கள்மீது படையெடுத்துச் சென்று போராடுகிறான். நாலாம்படியாக அப்போராட்டத்தில் வெற்றி பெறுகிறான்.

வெற்றி பெறுவது மாத்திரம் அவனது இறுதி நோக்கமன்று; வெற்றிக்குப்பின் ஐந்தாம்படியாக அவர்களைச் சிறைப்பிடித்து அடிமைகளாகத் தன் நாட்டிற்குக் கொண்டு வந்து அடக்குகிறான். அடிமைகளாக்கப்பட்ட சிங்களவர்களிடம் இதுவரை, தீமை மாத்திரம் இருந்து வந்ததைக் கண்டு வந்த கரிகாலன், இப்போது அவர்கள் அடக்கப்பட்ட நிலையில், அவர்கள் மூலம் நன்மையும் பெறக்கூடும் என்ற வகையை ஆறுவது நிலையாக அறிகிறான். அறியவே ஏழாவது நிலையாக அவர்களைக் காவிரிக்குக் கரை கட்டும் பணியில் ஈடுபடுத்தி நன்மையை உருவாக்கியதுடன், அவர்களையும் நன்கு காத்து ஆட்சி புரிகிறான். ஆகவே மேலே நாம் கண்ட ஏழு படிகளில் தமிழர்களுக்குத் தீமை செய்த இலங்கைவாழ் மக்கள், தமிழர்களுக்கு என்றும் பயன்படத் தக்க வழியில் காவிரிக்குக் கரை கட்டி நன்மை செய்தார்கள் என்றால், அது சோழன் கரிகாலன் எடுத்துக்கொண்ட ஏழு படிகளாகும். அது இன்றளவும் பயன்படும் சிறந்த நன்மையாக நின்று விளங்குகிறது. தீமை சுரந்த இடத்தில், நன்மை சுரப்பிக்கப்படுகிறது.

இவைகளை முறைப்படி ஐம்புலனோடு ஒப்பிட்டு நோக்கினால் :-

மாறுபடும் எண்ணம் தோன்றல் :– முதற்படி,
ஐம்புலனை வெற்றி பெற எண்ணல் :–2ஆம் படி,
ஐம்புலனோடு போராடுதல் :–3ஆம் படி,
ஐம்புலனையும் வெற்றி கொள்ளல் :–4ஆம் படி,
ஐம்புலனையும் அடக்கல் :–5ஆம் படி,
ஐம்புலனின் வகைதெரிதல் :–6ஆம் படி,
ஐம்புலனையும் ஆட்சிபுரிந்து காத்தல் :–7ஆம் படி,

**உரன்என்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான்**
**வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து**

ஆகவே திண்மையாகி அங்குசத்தால் ஐம்புலனாகிய யானையை அடக்கிக் காப்பவன் வீட்டு உலக வித்தாவான்.

ஆட்சிகளிலெல்லாம் ஐம்புலனாட்சியே சிறந்தது. நிலைகளிலெல்லாம், வீட்டுலக வாழ்வின் வித்தாக விளங்குதலே, சிறப்பு. இதுவே மனிதன் அடையத்தக்க நிலைகளில் எல்லாம் சிறந்த உன்னதநிலை. வீட்டு வாழ்விற்கு இவன் வித்தாக விளங்குவதால் அநேகருக்கு வழிகாட்டியாவான். இனி அடுத்த நிலையை நோக்குவோம்.

# இறைவனா? மனிதனா?

ஐம்புலனைப் பற்றிய ஏழு படிகளை நோக்கினோம். இவ்வேழனுள்ளும் அடங்காத ஒரு நிலை திருவள்ளுவப் பெருந்தகையால் கூறப்படுகின்றது. அது என்ன? ஐம்புலனுக்குக் காரணமான ஐம்பொறியையும் அவித்தல் என்ற நிலை. அவித்தலைச் செய்தவன் அவித்தான். பொறிவாயில் ஐந்தையும் அவித்தவன் ஐந்தவித்தான். இதுவே

வள்ளுவர் கூற்றுப்படி ஐம்புலனின் இறுதிப்படி ஏன்? மனிதருள் மிக மிகச் சிறந்தவரான நீத்தார் நிலையிலும், அருவமாக நின்றிலங்கிய இறைவன் உருவமாக ஐம்புலனுடன் விவரிக்கப்படும் நிலையிலும் இது வைக்கப்பட்டுள்ளமையால் என்க.

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தினுள் கடவுளுக்குச் சூட்டிய பெயர்களுள் ஒன்று ஐந்தவித்தான்! அதே பெயரை அவர் மீண்டும் நீத்தார் பெருமையில் வைப்பதன் மூலம் நீத்தவராகிய மனிதனுக்குச் சூட்டுவதன் காரணம் என்ன?

ஐந்தவித்தான், என்ற சொல்லின் மூலம் வள்ளுவர் குறிப்பது இறைவனையா, மனிதனையா? மனிதனைக்குறித்தால் அது எவ்வாறு இறைவனுக்குப் பொருந்தும்? இறைவனுக்குப் பொருந்தினால் அது மனிதனுக்குப பொருந்துமா? மனிதனும் இறைவனும் சமமானவர்களா? இல்லையெனில் மனிதன் இறைவன் நிலையை அடைந்ததைக் குறிப்பிடுகின்றாரா? அல்லது இறைவன் மனிதன் நிலையை அடைந்ததைக் குறிப்பிடுகின்றாரா?

அதாவது மனிதர் சிறந்த நிலையை அடைந்து இறைவனாக மாறுவதாக விளக்குகிறாரா? அல்லது இறைவன் தாழ்ந்த நிலையை ஏற்று, அதாவது தன்னைத்தானே தாழ்த்தி மனிதனாக வந்த நிலையை விளக்குகிறாரா? கடவுள் வாழ்த்தினுள் வரும் குறட்பாவாகிய

> "பொறிவாயில் ஐந்தவித்தான் பொய் தீர்ஒழுக்க "
> நெறிநின்றார் நீடுவாழ்வார்"

என்பதனுள் ஐந்தவித்தானாகிய இறைவனின் குணச் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன.

நீத்தார் பெருமையின் கீழ்வரும் குறட்பா வாகிய

**"ஐந்தவித்தானாற்றல் அகல்விசும்புளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி"**

என்பதனுள் அவனுடைய குணம் கூறப்படாமல், ஆற்றல் சிறப்பைச் சான்றுடன் விளக்குகின்றார்.

திருவள்ளுவர் தம் நூலில் 'ஐந்தவித்தான்' என்னும் சொல்லை மேலே கண்ட இரண்டு இடங்களில் மட்டுமே குறிப்பிட்டுள்ளார்.

ஐந்தவித்தான் ஆற்றலுக்கு இந்திரனே சான்று என வள்ளுவர் கூறுவதால், இக்குறட்பாவினுள் வள்ளுவர் ஏதோ ஒரு வரலாற்றைச் சுட்டிக் காட்டியுள்ளார் என்பது தெளிவுபட்ட ஒன்று. அவ்வரலாற்றை நாம் அறிந்துகொண்டால் அவ் வரலாற்றுக்குக் காரணமான ஐந்தவித்தான் யார் என்பதையும் நாம் காணமுடியும்.

'ஐந்தவித்தான்' என்பது எவ்வித மயக்கத்திற்கும் இடமின்றிக் கடவுள் வாழ்த்தினுள் இறைவனைக்குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமையால், இவ்வரலாற்றிலும், அது இறைவனையே குறித்து நிற்கிறதெனக் கொள்ளவேண்டியவர்களாகிறோம். இங்கு இறைவனைக் குறித்து நிற்கும் சொல்லாகக் கொண்டால், இதன் தலைப்பாம் 'நீத்தார் பெருமை'யினின்று மாறுபட்டதாகிறது. 'நீத்தார்' என்பது இறைவனைக் குறிப்பதல்ல. அது மனிதருள் சிறந்தோரைக் குறித்து நிற்கின்றது. ஆகவே, 'நீத்தார்' என்பதன்கீழ் வருகின்ற 'ஐந்தவித்தான்' மனிதனைத்தானே குறித்து நிற்க வேண்டும்?

மனிதனைக் குறித்து நிற்குமானால், மனிதனுக்கு இந்திரன் எவ்வாறு சான்றுபகர முடியும்? எங்கே யாரைக் குறித்துச் சான்று பகர்ந்ததாக வரலாறு இருக்கிறது?

இதுவரை உரையாசிரியர்களால் கூறப்பட்ட வரலாறுகளை நோக்குவோம்.

'ஐந்தவித்தானுக்குச் சான்று இந்திரனே' எனக்கொண்டு, இந்திரனே ஐந்து புலன்களையும் அவித்துச் சிறந்து விளங்குதலால், ஐந்தவித்தவனுக்குத், தனக்குத்தானே சான்றாக விளங்குகிறான் எனக் கொள்ளப்பட்டு, ஐந்தவித்தான் என்பது இந்திரனையே குறிக்கும் எனக்கொள்வாரும் உண்டு.

'ஐந்தவித்தான்' என்பது இந்திரனையே குறித்து நிற்குமானால், அவன் தனக்குத்தானே எவ்வாறு சான்றாக விளங்கினான்? இந்திரனைப் பற்றிக் கூறப்படும் கதைகளுள், அவனுக்கும் ஐந்தவித்தலுக்கும் எவ்விதச் சம்மந்தமுமற்ற நிலை விளக்கப்படுகிறதே, ஏன்? அரம்பை, ஊர்வசி போன்றோருடன் அவனை இணைப்பதும், போக பூமியாக அவன் நாட்டை விளக்குவதும் ஏன்? இந்திர பதவியை அடைவதற்கும், யாகங்கள் செய்வதும், தான தருமங்கள் செய்வதும் வழியாகக் கூறப்படுகின்றனவேயன்றிஐந்தவித்தல் கூறப்படவில்லையே, ஏன்?

'ஐந்தவித்தான்' என்பது கடவுள் வாழ்த்தில் இறைவனுக்குச் சூட்டப்பட்ட பெயர் இந்திரனுக்கு எவ்வாறு பொருந்துகிறது?

'நீத்தார் பெருமை'யின்கீழ் வருகின்ற 'ஐந்தவித்தான்' நீத்தாராகிய மனிதனைத் தானே குறித்து நிற்க வேண்டும்?

ஆகவே 'ஐந்தவித்தான்' இந்திரனைக்குறித்துக் கூறப்படவில்லை. 'ஐந்தவித்தான்' வேறு, இந்திரன் வேறு என்பது தெளிவு.

அப்படியானால் இந்திரன் சான்று பகரும் 'ஐந்தவித்தான்' யார்?

பரிமேலழகர் தம் உரையின் கண் ''தான் ஐந்தவியாது சாபமெய்தி நின்று அவித்தவனதாற்றல் உணர்த்தினமையின், இந்திரனே சாலுங்கரியென்றார்.'' எனக்கூறுவதன் மூலம், அகலிகையின் கதையை உட்கொண்டு 'ஐந்தவித்தான்' என்பது கௌதம முனிவரைக் குறித்து நிற்கின்றது எனக்கொண்டார்.

[''கௌதமரின் மனைவியாகிய அகலிகையை அடைய விரும்பிய இந்திரன், கௌதமரை ஏமாற்றி அகலிகையுடன் சேர, இதையறிந்த கௌதமர் சாபமிட, தன் உடலெல்லாம் தான் விரும்பிய உறுப்பாகி, ஆயிரங்கண்ணுடையவனாகிறான் இந்திரன். அகலிகையும் கல்லாக்கப்படுகிறாள்.]

இக்கதையைத்தான் வள்ளுவர் ஏற்றுக் கொண்டு குறட்பா யாத்துள்ளாரா? மனிதருள் உயர்ந்த நீத்தார் பெருமையுடன், இறைவன் நிலையாம் ஐந்தவித்தானாகக் கௌதம முனிவர் விளங்குகிறார் என வள்ளுவர் கொள்ளுகின்றாரா?

சிறந்த ஐந்தவித்தவனதாற்றல், வெளிப்பட்டதற்குச் சான்று, இவ்விழி நிலையில் சித்திரிக்கப்படும் இந்திரனா?

இவனைப் புகழ்ந்து 'அகல் விசும்புளார் கோமான்' என வள்ளுவர் கூறியிருக்கின்றாரா?

திருவள்ளுவர் தம் நூல் முழுவதிலுமே வரலாறு ஒன்றைச் சுட்டிக்காட்டும் இடமாக விளங்குவது இக்குறட்பா ஒன்று மட்டுமே. இதில் இவ்வளவு கீழ்த்தரமான, அருவருப்புத்தரும் கதை ஒன்றை எடுத்துக் கூறியிருப்பாரா? அதிலும் முற்றிலும் பொருளோடும் தலைப்போடும் முரண்படும் ஒன்றைத்தாம் கையாண்டிருப்பாரா?

புதிதாக ஒரு ஊரினுள்ளே செல்லுகிறோம். எதிரே ஒருவர் வருகின்றார். நம்முடன் உரையாடுகின்றார். உரையாடலினூடே தம்மைப் பற்றி நம்மிடத்தில் அறிமுகப் படுத்துகின்றார். ‘‘நான் எப்படிப்பட்டவன் என்பது உங்களுக்குத் தெரியாது; நீங்கள்தான் ஊருக்குப் புதியவராயிற்றே. அதோ அந்த மூலை வீட்டில் வாழுகின்றானே முத்தன்; எந்தக் கொடிய செயலுக்கும் அஞ்சாதவன்; அவனைக் கேளுங்கள். அவன் கூறுவான் என்னைப் பற்றிச் சான்று’’ என்று கூறுகிறார்.

எதிரே வந்தவரைப் பற்றி என்ன நினைப்போம்? இவருக்குச் சான்று ஊரிலேயுள்ள சிறந்தவர்கள் அல்ல. எக்கொடிய செயலுக்கும் அஞ்சாத மூலைவீட்டு முத்தன்; மிகச் சிறந்தவர் என எண்ணுவோமா?

சான்று கூறும் இந்திரன் நிலையை விட்டு விடுவோம். ஐந்தவித்தவனாகக் காட்டப்படும் கௌதமர் உண்மையிலேயே ஐந்தவித்தவனாக விளங்குகிறாரா? அதை அறிஞர் யாவரும் ஏற்றுக் கொள்ளமுடிகிறதா?

ஐம்புலன்களையும் அவித்து, அதாவது துன்பத்திற்கொப்புக்கொடுத்துப் பலியிட்டு, யாவருக்கும்

இன்பமாம் அமிழ்தமளிக்கும் மேலான நிலைக்கு ஆக்கியிருக்கிறவன் அல்லவா ஐந்தவித்தான். வள்ளுவர் தம் நூலில் விளக்கப்போகும் அறநெறி, மக்களுக்கு நீடுவாழ்வை அளிக்கும் ஐந்தவித்தான் காட்டிய பொய்தீர் ஒழுக்க நெறியெனக் கூறுகின்றாரே. கௌதமர் காட்டியிருப்பது பொய்தீர் ஒழுக்க நெறியாகுமா? அது மக்களுக்கு நீடுவாழ்வைக் கொடுக்குமா? கௌதமர் ஐம்புலனையும் அடக்க முடியா நிலையில்தானே சாபம் பிறந்தது. கோபம் கொண்டமிருகம் தாக்குவதற்கும், கோபம்கொண்ட கௌதமர் சபித்ததற்கும் வேற்றுமை என்ன?

அப்படியானால் ஐம்புலன் நிலையில் அடக்கலாகிய ஐந்தாம் படியைக்கூட கௌதமரால் எட்டிப்பிடிக்க முடியவில்லை என்றாகிற தல்லவா? இவரை இறைவனுக்குச் சமமாகக் கொண்டு கடவுள் வாழ்த்தில் போற்றியிருப்பாரா வள்ளுவர்? இவர் இல்லற வாழ்வின் நிலைகண்டு இரங்கலாமேயன்றி இறைவனுக்குச் சமமாக இவரைக் கொள்ள முடியுமா? நீத்தார் தலைக்குப் பெருமையை ஏற்படுத்தும் நிலையிலும் இவர் நிலை இல்லை. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் சால்பு நிலைகூட, இவரைவிட மிக உயர்ந்தது. ஆகவே திருவள்ளுவர் கொள்ளும் வரலாறு பரிமேலழகர் காட்டும் கதையை அடிப்படையாகக்கொண்டது அன்று. எனவே வள்ளுவர்கூறும் ஐந்தவித்தான் கௌதமமுனிவர் அன்று. பின்யார்?

கடவுள் வாழ்த்திற்குச் செல்லுவோம். கடவுள் வாழ்த்திலே ஐந்தவித்தான் என்ற சொல்லை எந்த நிலையிலே கையாண்டுள்ளார்? ஒவ்வொரு குறட்பாவிலும் அவர் விளக்கியிருக்கும் கொள்கை என்ன என்பதை நோக்குவோம்.

## வள்ளுவர் வணங்கும் இறைவன்

வள்ளுவரின் இறைக் கொள்கையை நாம் அறிவதற்கு ஆதாரமாயிருக்கும் ஓரே கருவி, திருக்குறளின் முதல் அதிகாரமாம் கடவுள் வாழ்த்துப் பகுதியே. கடவுள் வாழ்த்தினுள் அவர் கூறியுள்ள கருத்துக்களை நிரல்பட நோக்குவோம்.

மாக்களினின்றும் மக்கள் வேறுபடுவதற்கு அடிப்படைக் காரணமாய் அமைவது அறிவு. அவ்வறிவை அடையும் கருவியாய் விளங்குவது கல்வி. அக்கல்வியின் உயிர்நாடியாய்த் திகழ்வது எழுத்து. எழுத்துக்களுள் முதன்மை பெறுவது அகரம். தானும் தனித்தியங்கி மற்ற எழுத்துக்கள் இயங்குவதற்கும் மூலகாரணமாய் விளங்குவது அகரம். அவ்வாறே தான் தனித்தியங்கி உலகம் இயங்குவதற்கும் மூலகாரணமாய் விளங்குபவன் இறைவன்.

*அகர முதல எழுத்தெல்லா மாதி*
*பகவன் முதற்றே யுலகு*

அகரம் இன்றி எழுத்து இல்லை. இறைவன் இன்றி உலகம் இல்லை. கல்வியின் நிலைக்களனை அகரம் போன்று உலகின் நிலைக்களன் ஆனவன் இறைவன். அவ்விறைவனை அறிவதே கல்வியின் பயன். கல்வியில் அவ்விறைவனை அறியும் கல்வியும் உண்டு. அவனை அறியாக் கல்வியும் உண்டு. ஒருவன் இறைவனை அறியாக் கல்வி எவ்வளவு கற்றிருந்தாலும் அதனல் யாதொன்றும் பயன் இல்லை.

**கற்றதனலாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழா அர் எனின்**

ஆகவே கல்வியின் பயன் நற்றுளாம் இறைவனின் தாளை வணங்குதலே. இறைவனை அறிவதோடன்றி அவன் தாளை வணங்குதலே சிறப்பு. அதுவே கல்வியின் பயன்.

கல்விகற்ற மாந்தர் யாவரும் இறைவனை வணங்குகின்றனரா? பெரும்பகுதி வணங்குகின்றனர். சிறு பகுதி புணரவில்லை. ஆதலால் வணங்கவில்லை. உணராக் காரணம் அவர்கள் இறைவனை வெளியே காட்சிப் பொருளாகத் தேடுகின்றனர். பொருள் முதல் வாதிகளாய் நின்று பொருளுக்கு முதன்மையிடம் கொடுத்து விடுகின்றனர். அவர்கள் தங்கள் உள்ளத்தின் உணர்ச்சியைக்கூட உணர முடியாதிருக்கின்றனர். இறைவன் இருப்பது எங்கே? அவர்கள் உட்பட மனிதர் யாவருடைய உள்ளத்திலுமே இருக்கிருன். அதை உணர்ந்தவர் நீடு வாழ்கின்றனர். மற்றவர்களுக்கு நீடு வாழ்வு இல்லை. அது என்ன வாழ்வு? அதுவே ஆன்ம வாழ்வு. நீடு வாழ்வு. தன் உள்ளத்திலிருக்கும் கடவுளை அறியா நண்பன், தன் இறப்போடு 'தான்' அழிந்து விடுவதாக எண்ணி நடந்து அழிவை நோக்கிப் போகிருன். ஆனல் தன் உள்ளமாம் இதயத் தாமரையில் நாம் நினைக்கு முன்பே தங்கி இருப்பவனுகிய இறைவனுடைய நற்பாதங்களைச் சேர்ந்தவர்கள் நீண்ட வாழ்வை நம்புகின்றனர். நம்பியதைப் பெறுகின்றனர்.

*மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார்*

உடல் மடிந்த பின்னும் வாழ்க்கையுண்டா? உண்டு என்கிருன் ஆத்திக நண்பன். இல்லை என்கிருன் நாத்திக நண்பன். நாம் உண்டு என்

னாலும், இல்லை என்றாலும், முடிவு நமது கையில் இல்லை. நமது முடிவுதான் நமக்கு மேற்பட்ட அவன் கையில் இருக்கிறது. அவன் நமது வாழ்க்கையின் முடிவில், அதாவது உலகின் முடிவில் உலகம் முழுவதுக்குமான மகா பெரிய நீதிபதியாக விளங்குவான். அவன் முன் நாம் நம்முடைய நன்மை தீமை ஆகிய இரண்டுடனும் செல்லவேண்டும். நீதிபதிக்குரிய குணம் என்ன?

காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—
காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும் உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும்.

சாதாரண உலக நீதிபதியே காய்தல் உவத்தல் அகற்றும் நிலையில் இருக்கும்பொழுது, பரம நீதிபதியாகிய அவனுக்குள் கொஞ்சமேனும் விருப்பு வெறுப்புக்கிடமுண்டோ? அவன் சிறிதும் பிறழா மாபெரிய நீதிபதி. அவனுக்குக் கொஞ்சமும் விருப்பு வெறுப்பு இல்லை. நம்முடைய செயலுக்குத் தக்க தீர்ப்பு நிச்சயம் உண்டு. இதில் யாரும் கொஞ்சமும் ஐயம் கொள்ளத் தேவை இல்லை. நமக்கு உலகில் வாழும் இப்பொழுதும், அவனுக்கு முன் நியாயத் தீர்ப்புக்காக நிற்கும் அப்பொழுதும், நியாயத் தீர்ப்பின் முடிவிலும், ஆகிய எல்லாக் காலங்களிலும் துன்பம் வராதிருக்க வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது என்ன? வேண்டுதல் வேண்டாமையிலாத சிறந்த நீதிபதியாகக் காட்சியளிக்க விருக்கும் அவன் அடியை இப்பொழுதே சார்ந்து, நன்மை செய்து வருதலே

அவ்வழியாகும். அப்படிச் சார்ந்தால் மூக்காலத்திலும் நமக்குத் துன்பம் இல்லை.

**வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல**

மகா பெரிய நீதிபதியின் நியாயத் தீர்ப்புக்குப் பின், துன்பம் இன்பம் ஆகிய இரண்டு நிலைகளையும் உயிர்கள் தாங்கள் உலக வாழ்வில் செய்த செயலின் பயனுகை அடைகின்றன. இவ்விரண்டு நிலைகளுள் நாம் அஞ்சத் தக்கது, இருளில் சேர்க்கும் துன்ப நிலையாம் இருள் சேர் நிலையே. இருளிலே உயிரைச் சேர்ப்பதற்குக் காரணமாக இருப்பவை கொடிய இரண்டு வினைகள். வினைகள், நல்வினை, தீவினை என இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. நல்வினை இருளில் சேர்க்கும் என்பது வள்ளுவர்க்கு உடன்பாடன்று. ''மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று''எனக்கூறியவர் நல்வினை இருளில் சேர்க்கும் என்ற கருத்தை ஏற்றுச் கொள்வாரா? நல்வினையும் பிறவிக்குக் காரணம் எனக் கொண்டால், பிறவி நீக்கத்திற்கு நல்வினை எவ்வாறு பயன்படும்? நல்வினையின்றிப் பிறவி நீக்கம் இல்லையே. ஆகவே எவ்விதத்திலும் நல்வினை இருளில் சேர்ப்பது இல்லை. இருளில் சேர்ப்பவை தீவினையின் இரண்டு பிரிவுகளே. தீவினை உயிர்களை இரண்டு விதங்களில் ஆட்கொள்கிறது. அவை இரண்டையும் இருளில் சேர்க்கும் இருவினை என வள்ளுவர் கொள்ளுகின்றுர். அவ்விரு வினை யாவன 1. மனிதன் தன் வாழ்நாளில் செய்யும் பாவம் (குற்றம்) காரணமாக ஏற்படும் பாவ வினை. 2. இவன் முன்னேர் செய்த பாவம் காரணமாகப் பரம்பரையாகத் தொடர்ந்து வரும் பிறவி வினை. ஆகவே இவன் வினை, இவன் முன்னேர் வினை

ஆகிய இருவினையும் இவனை இருளில் சேர்க்கக் கூடியவை. இந்த இரு வினைகளையும் இரு கடல் களாக வள்ளுவர் உவமித்துக் கூறுகிறார். தன் வாழ் நாளில் செய்யும் பாவ வினை **பாவக்கடல்.** பிறவியில் தொடர்ந்து வரும் பிறவி வினை **பிறவிப் பெருங்கடல்.**

ஒரு மனிதன் ஈட்டிய, பொன், பொருள், கடன் முதலியன எவ்வாறு அவன் பின்னோருக்கு உரிமையாகின்றனவோ, அவ்வாறே அவன் ஈட்டிய தீவினையும் பின்னோரைத் தொடர்கின்றது. பரம் பரையாகத் தொடர்ந்துவரும் உடலமைப்பு, நோய் முதலியனவும் இதனுள் அடங்கும். தன் உடலைத் தீயவழிகளில் கெடுத்துக் கொண்ட தந்தையின் தீமை, பிள்ளைகளைப் பின்தொடருவதை நாம்காண வில்லையா? உலகின் முதன் மனிதன் செய்த தவறு (பாவம்) அவன் மக்கள் யாவரையும் பிறவியி லேயே பின்பற்றித் தொடர்ந்து வருகிறது. இது பரம்பரை பரம்பரையாகப் பிறப்புத் தோறும் தொடரும் பிறவிப் பெருங்கடலாக விளங்குகிறது. இவை இரண்டுவினைகளிலுமிருந்து விடுதலைகொடுக் கக் கூடியவன் இறைவன் ஒருவனே. மகாபெரிய நீதிபதியாக வரப்போகிற அவ்விறைவனின் புக ழையே பாடுகிறவர்களுக்குக் கொடிய இருளில் சேர்க்கக் கூடிய இரண்டு தீவினையும் சேருவதில்லை.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

ஏன் சேருவதில்லை. இறைவன் அவைகளிலிருந்து மனிதருக்கு விடுதலையைத் தேடி வைத்துள்ளான். இக்கருத்தை அடுத்த குறட்பாவினுள் விளக்கிக் காட்டுகிறார்.

இறைவன் புகழ்பாடுதல் என்றால் என்ன? அவன் புகழ் எப்படிப்பட்டது? யார் அப்புகழைக் கேட்டது? அவன் புகழ் என்ன?

இதயத் தாமரையில் ஏகியவன் இறைவன். அவனை உள்ளத்தில் உணர முடிகிறது உணர்ந்தவர் அவன் ஏவிய வழியில் நடக்குங்கால் நன்று ஆவதை அறிகின்றனர். தாங்கள் அடைந்த நன்மையை மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுகின்றனர். அவ்வாறு நன்மையைக் கூறுங்கால், நன்மைக்குக் காரணராகிய இறைவனின் புகழ் பேசப் படுகிறது.

இங்கு தனக்குக் கிடைத்த வெற்றிக்குக் காரணம் 'தான்' என்ற அகந்தைக்குரிய எண்ணம் நீங்கி தனக்கு மேலாய் விளங்கி, தன்னை நடத்திய இறைவனைப் புகழும் உயர் ஒழுக்கம் நடைபெற்று, இறைவனின் புகழ் இயம்பப்படுகிறது. இது உள்ளத்தால் உணர்ந்து புகழ் பாடுதல். இவ்வாறு உள்ளத்தால் உணர்வதிலிருந்து மனிதருக்கு ஒரு ஏக்கம் ஏற்படுகின்றது. அது என்ன? இறைவனே மனிதனாக வந்து மக்கள் முன் காட்சியளவாய்த் தோன்ற வேண்டும் என்பதே. அருவமான இறைவன் உருவமாகிப் பூமிக்கு வரவேண்டும் என்பது எல்லா சமயங்களிலுமுள்ள பக்தர் யாவருடைய வேண்டுகோளுமாகும்.

சிவஞான போதம். சிவஞான சுவாமிகள் எழுதிய சிற்றுரை 158ஆம் பக்கத்தில்

**இல்லாகிமுலைப்பாலும் கண்ணீரும் ஏந்திழைபால்**
**நல்லாய் உளவாமல் நீர்நிழல்போல்—இல்லா**
**அருவாகி நின்றானை யாரறிவார் தானே**
**உருவாகித்தோன்றானேல் உற்று.**

இறைவன் தானே உருவாகித் தோன்ருனேல் இல்லா அருவாகி நின்ருனை உற்று யாரறிவார்? என வினவுகிருர்.

இறைவன் பூமிக்கு வருவது மாத்திரமல்ல; எது நல்வழி எனத் தெரியாது திகைக்கும் மக்களுக்கு, அவர்கள் நடக்க வேண்டிய நல்வழியை அவன் காட்டவேண்டும். மனிதரின் உள்ளத்தில் உணர்ச்சி மாத்திரையாய் மட்டும் விளங்கி நின்று இறைவன் மனிதருக்கு ஒழுக்க நெறியைக் காட்ட முடியாது. ஆகவே இவைகளை விளக்க அவன் காட்சி மாத்திரையாய் அருவத்திலிருந்து உலகில் மனித உருவமானுன் எனவும், வள்ளுவர் தம்நூலில் இனி விரித்துரைக்கப்போகும் ஒழுக்கநெறி, சாதாரண ஒழுக்க நெறி அன்று, ஐந்தவித்தவனுகிய இறைவன் காட்டிய பொய்தீர் ஒழுக்க நெறி எனவும் கூறுகின்ருர்.

இவ்வாறு இறைவன் மனிதன் ஆனுன் என்பதை வள்ளுவர் மட்டுமன்றி சித்தர்களுள் சிறந்தவராம் அகத்தியரும் ''இறைவன் பூமிக்கு வந்து நற்குருவாய் நடந்து வழிகாட்டிப் பின் பரலோகம் சென்ருன்'' எனத் தெளிவாகக் கூறுகின்ருர்.

அகத்தியர் ஞானம்—30 : 23.

வணங்குவாய் செகசோதி ஒருவனுகி
மாநிலத்தை ஒருநொடியில் வகுத்தேமண்ணில்
குணமான மனிதரையும் படைத்த பின்பு
குவலயத்தில் தானுதித்துக் குருவாய் வந்து
சன்மான சமுசாரம் ஒன்றில்லாமல்
சன்னியாசி போலிருந்து தவத்தைக் காட்டி

அன்பான சித்தர்களை இருத்திப் போட்டு
அகண்டதலஞ் சென்றவரை அண்டுவாயே

"எல்லாவற்றையும் படைத்த இறைவன் மனிதனாய் வந்து, இல்லறத்தில் ஈடுபடாமல் நல்வழியைக் காட்டி, சீடர்களாம் சித்தர்களை இருத்திப் போட்டுப் பரலோகம் சென்றார்" என அகத்தியர் கூறுகின்றார். இறைவன் மனிதனானதில் இதையும்விடச் சிறந்த நோக்கம் ஒன்றுண்டு என்பது வள்ளுவர் கூற்று.

மகாநீதிபதியாகத் திகழுபவன் இறைவன். மனிதர் தங்கள் தவற்றுக்குத் தக்க தண்டனையை அவனிடம் பெறுவர். உலகில் மனிதன் தான் செய்த தவற்றை உணருங்கால் அவன் திருந்தி நல் வாழ்வு வாழ்ந்தாலுங்கூட, அவன் முன்பு செய்த தீமைக்குத் தக்க தண்டனையை அடையக் கடமைப்பட்டவன் ஆகிறான். இத்துடன் பிறவியில் தொடர்ந்து வரும் பிறவி வினைக்குரிய தண்டனையையும் இவன் அடைய வேண்டியவனாகிறான். ஆகவே தனக்குரிய தண்டனையைத் தனக்குப்பதில் அடையக்கூடிய பிணை ஒன்றை நாடுகிறான். அவ் வாறு அவன் நாடிய தன்பயனால், பாவமுள்ள மனித னுக்குப்பதில் பாவமற்ற ஒரு உயிரைப் பலியிடும் பலிமுறை ஏற்பட்டது. இப்பலிமுறையில் குற்ற மற்ற உயிர் பாவ நிவர்த்தியாகிறது.

இவ்வாறு ஒரு மனிதனுடைய பாவத்தை, பாவமற்ற ஒரு உயிரைப் பலியாக்குவதன் மூலம் நீக்கக் கூடும் என்ற நிலை பூர்வீகமான எல்லா மதங்களிலும் பேசப்படுகிறது.

நமது சங்க இலக்கியங்களிலும், ஏன் தொல் காப்பியத்திலுங்கூட வேள்வியைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

'தொல்லுயிர் வழங்கிய அவிப்பலியானும்''
தொல் 1022

'கபிலைகண்ணிய வேள்வி நிலையும் தொல் 1036

''ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை
நான்மறை முதல்வர் சுற்றமாக
மன்னர் ஏவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாள்வாய் வேந்தே'' புறம் 26

இந்து சமயத்தின் வேதங்களுள் பழமையான ரிக்வேதமும் வேள்வியைப்பற்றி விரிவாகப் பேசுகிறது.

இவ்வாறு குற்றமற்ற உயிர், குற்றமுள்ள ஒரு மனிதனின் பாவத்தைப் போக்கும் என்ற நம்பிக்கை பின் நடைபெற இருப்பதை அடிப்படையாகக் கொண்டது என்பது ரிக்வேதத்தில் விரிவாக விளக்கப்படுகிறது. பின் நடைபெற இருப்பது என்ன? மகாநீதிபதியாகிய இறைவனே மனிதனாக வந்து, மனிதர் அடைய வேண்டிய தண்டனையைத் தம் உடலில் ஏற்று மனிதருக்குப் பிணையாகத் தம்மைத் தாமே பலியாக்குவார் என்பதே.

ஆத்மதா (தம்மைத்தாமே பலியாகத் தந்தவர்) என்று அழைக்கப்படும் பிரஜாபதியே ஆதிபலியாம் என்னும் குறிப்பு வேதங்களில் நிரல்படக் காணப்படுகிறது. ரிக்வேதம் 10:31:6, 8, 32:2-ல் ''விஸ்வகர்மா எனப்பட்ட பிரஜாபதியாகிய புருஷன் தன்னையே பலியாக்குவானாகவும்'' எனக் கூறப்பட்டிருக்கிறது.

இரத்தம் மனிதனுக்கு உயிராக விளங்குகிறது. இரத்தம் உடலிலிருந்து நீங்கினால் உயிரும்

நீங்குகிறது. ஒருவனுக்கு உயிர் கொடுப்பதற்குப் பிறிதொருவனின் இரத்தம் பயன்படுகிறது. அவ்வாறே ஒருவனுடைய உயிருடன் ஒட்டிய தீமையைப், பிறிதொன்றின் தூய இரத்தம் நீக்கவல்லதாகிறது; இரத்தம் சிந்துதல் இன்றி விடுதலை இல்லை என நம்பப்படுகிறது.

புருஷ சூக்தம், ''பலியிடுகிறவரும் பலியை ஏற்றுக் கொள்ளுகிறவரும் கடவுளே'' எனக் கூறுகிறது.

''விஸ்வ கர்ம சகல படைப்புகளையும் பலி செலுத்தி இறுதியில் தம்மைத் தாமேயும் பலியாக்கினர்'' என்கிறது வேதம்.

இவ்வாறு உயிர்களைப் பலியிடும் வேள்வி முறை திருவள்ளுவர் காலத்திலும் இருந்த தென்பதை

**'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத் துண்ணாமை நன்று'**

என்னும் குறள் நன்கு விளக்குகிறது. அவி என்பது வேள்விப் பொருளை, அதாவது பலியிடப் படும் பலிப்பொருளைக் குறிக்கிறது.

மேலே கண்ட முறையில் வேதங்கள் இறைவனே மனிதனாக வந்து தன்னைத் தானே பலி யாக்குவான் எனக்கூறியது எங்ஙனம் நிறைவேறி யுள்ளது?

இங்கு வள்ளுவர் அதை நிறைவேறி விட்ட தாகக் கூறுகின்றார். எவ்வாறு?

''பொறிவாயில் ஐந்தவித்தான்'' எனக் கூறு வதன் மூலம், இதன் விளக்கத்தைக் காண் போம்.

## அவித்தான்

'ஐந்தவித்தான்' என்பதில் 'ஐந்து' என் பதை முன்பு வள்ளுவர் வழியில் நின்று கண் டோம். 'ஐந்து' குறித்து நிற்கும் ஏழுபடிகளையும் அதன் உச்சிப்படியாகிய ஐம்புலனை ஆட்சி புரிந்து காத்தலையும் கண்டோம். இதுவரை நாம் கண்டவைகளிலிருந்து மாறுபட்ட ஒன்றை வள் ளுவர் இக்குறளில் கூறுகின்றார். அது என்ன? ஐம்புலனையும் (அவித்தல்) என்ற நிலை. அவ்வவித் தல் நிலையைச் செய்தவன் அவித்தான். 'அவித் தான்' என வழங்கப்படுபவன் இறைவன். ஏன்? கடவுள் வாழ்த்தினுள் கடவுளைக் குறிக்கும் பெயர் களாக வள்ளுவரால் கூறப்படுவனவற்றுள் ஒன்று ஐந்தவித்தான். அதாவது ஐம்புலனையும் அவித் தான் என்பது. அவித்தான் என்பதன் பொருள் என்ன? அவித்தான் என்பதைப் பிரித்தால்

அவி—த்—த்—ஆன்

அவி—பகுதி

த்—சந்தி

த்—இறந்தகால இடைநிலை

ஆன்—ஆண்பால் படர்க்கை ஒருமை வினை முற்று விகுதி.

பகுதியின் பொருளைக் கண்டால் மொத்தப் பொருளைக் காணமுடியும்.

அவி—இல்லாமல் ஆக்கு, (நெருப்பை அவி) -(1)
அவி—பக்குவப்படுத்து (காயை அவி) -(2)
முதல் பொருளைக் கொண்டால்

ஐந்தவித்தான்—ஐம்புலனையும் இல்லாமல் ஆக்கினான். இறைவனை இதுவரை அருவமாகக் காட்டிய வள்ளுவர் கடவுள் வாழ்த்தின் ஆறுவது குறட்பாவாகிய இதனுள் ஐந்து புலனோடு கூடிய உருவமாகக் காட்டுகிறார். ஐம்புலனோடு உருவமான இறைவன் எதற்காக, உருவமாக வேண்டும்? உருவமாவதில் ஒரு நோக்கம் இருக்கவேண்டும். இருந்தது என்பது வள்ளுவர் கொள்கை. ஐம்புலனோடு தோன்றிய இறைவன் ஐம்புலனையும் இல்லாமல் ஆக்கினான். அதாவது அழித்தான் என்பது பொருந்தாது. ஏன்? ஐம்புலனையும் இல்லாமல் ஆக்குவதற்காக அவன் உருவாக வேண்டியதில்லை. ஆகவே முதல் பொருள் பொருந்தவில்லை.

இரண்டாம் பொருளைக் கொண்டால்:—

ஐந்தவித்தான்—ஐம்புலனையும் பக்குவப் படுத்தினான்.

இது முதற்பொருளைவிடச் சற்று பொருந்துவதாகக் காணப்பட்டாலும், இதிலும் குறைபாடு தோன்றுகிறது. என்ன? பக்குவமில்லாத ஒன்றைத்தான் பக்குவப்படுத்த வேண்டும். அப்படியானால் இறைவனின் ஐம்புலனும் பக்குவம் இல்லாமல் இருந்ததா? உலகில் தோன்றுவதன் மூலம் அதைப் பக்குவப் படுத்தினானா? பக்குவமற்ற தன் ஐம்புலனையும் பக்குவமாக்குவதற்காக இவ்வுலகில் தோன்றினானா? இவ்வாறுதான் வள்ளுவர் கூறுகின்றாரா? வள்ளுவர் ஒரு போதும்

இவ்வாறு இறைவனைக் கூறியிருக்கமாட்டார். பக்குவப் படுத்த வேண்டிய அவசியம் மனிதர்களுக்குத் தேவை. இறைவனுக்கல்ல. அப்படியானல் அதன் பொருள் என்ன? வள்ளுவர் தம் நூலுள் 'அவி' என்னும் சொல்லைக் கையாண்டுள்ளாரா? எப்பொருளில் கையாண்டுள்ளார் என நோக்குவோம்.

புலால் மறுத்தல், கேள்வி ஆகிய இரு அதிகாரங்களிலும் 'அவி' என்னும் சொல்லை வள்ளுவர் கையாண்டுள்ளார்.

**புலால் மறுத்தலில்**

*அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத் துண்ணாமை நன்று* —259

**கேள்வியில்**

*செவியுணவிற் கேள்வியுடையார் அவியுணவின்*
*ஆன்றாரோ டொப்பர் நிலத்து* —41

மேலேகண்ட இரு இடங்களிலும் வள்ளுவர் 'அவி' என்னும் சொல்லை ஒரே பொருளில் கையாண்டுள்ளார். அவர் கொள்ளும் பொருள்

அவி—பலிப்பொருள்

அவிசொரிந்து—பலிப்பொருள் இட்டு

அவியுணவு—பலிப்பொருளாகிய உணவு

ஆகவே 'அவி' என்பது பலிப்பொருள் என்னும் பொருளைத் தருகின்றது என்பது வள்ளுவர் வாக்காலேயே விளங்குகின்றது.

அவி—பலிப்பொருள்

அவித்தான்—பலிப்பொருளாக்கினன்

ஐந்தவித்தான்—ஐம்புலனையும் பலிப்பொரு ளாக்கினன்.

'அவி' என்னும் தமிழ்ச் சொல்லே ஓசை மாறி 'ஹவிசு' என்ருயிற்று.

[மணிவிளக்கவுரை]

'அவித்தான்' என்னும் சொல்லுக்குப் பரிமேலழகர் கொள்ளும் 'அடக்கினன்' என்னும் பொருள் எவ்விதத்திலும் பொருந்தாமையை நாம் காணமுடிகிறது. அடக்க முடியாத தன் புலன்களை அடக்குவதற்காகவே இறைவன் ஐம்புலனோடு தோன்றினன? மேலும் 'அவி' என்ற பகுதியில் அடக்கல் என்ற பொருள் இல்லை. அடக்குதல் நாம் பார்த்த வள்ளுவர் கூறும் படிகளுள் ஐந்தாம்படி யைச் சார்ந்தது. அதையும்விடச் சிறந்த இரண்டு நிலைகள் மனித நிலையிலேயே இருக்கின்றன. இறை நிலையில் கூறப்படுவது அவித்தல். ஆகவே நாம் மேலே கண்ட பொருளே சிறப்புடையதாக விளங்கு கிறது.

ஐம்புலன் முழு உடலையும் குறித்து நிற்ப தால் 'ஐந்தவித்தான்' என்பது தன்னையே பலிப் பொருள் ஆக்கினன் என முடிகிறது. தன்னைத் தானே அவித்தான் என்ருல் தற்கொலை செய்து கொண்டான் என முடியுமோ என்ருல் அன்று. மனிதன் உயிரை மற்றவர் நீக்க முடியும். மனித ஞக வந்த இறைவன் உயிரை, அவனே தன் உடலிலிருந்து நீக்கமுடியுமேயன்றி, அவன் விருப் பத்திற்கு மாருக மற்றவர்கள் நீக்க முடியாது. ஆகவே மனிதனுகத்தான் வந்ததன் நோக்கம் நிறைவேறும் பொருட்டுத் தன்னுயிரைத் தானே

நீக்குகிறான். தன் உடலைத் தான் பலிப்பொருளாக ஒப்படைப்பதன் மூலம், தானே ஐந்தவித்தவனாக விளங்குகிறான்.

மகா நீதிபதியாகிய இறைவன் மனுமக்கள் மீது இரக்கம் கொண்டவனாய்த் தானே இப்பூவுலகில் ஐம்புலனோடு கூடிய மனிதனாய் வந்து, குற்ற மற்ற பொய்தீர் ஒழுக்கமாகி நின்று, மக்கள் நீதிபதியாகிய தன்னிடம் சேருவதற்குத் தானே வழியாகி, அவர்கள் குற்றத்தைத் தன் உடலில் ஏற்று, ஐம்புலனும் தன்னையே மற்ற உயிர்கள் உய்யும் பொருட்டு பலிப்பொருள் ஆக்கி, அதன் மூலம் எல்லோரும் வாழ்வடைவதற்குரிய நீடுவாழ்வாய் விளங்குகிறான். அவன் காட்டி நிற்கும் நெறியில் நின்றார் நீடுவாழ்வார். அதாவது வள்ளுவர் தம் நூலுள் இனி விரித்துரைக்கப்போகும் அறநெறி சாதாரண ஒழுக்க நெறியன்று; ஐந்தவித்தான் காட்டிய பொய்தீர் ஒழுக்கநெறி எனக் கூறுகிறார்.

*பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*
*நெறிநின்றார் நீடு வாழ்வார்*

('பொறிவாயில்' என்பது பின்னர் விளக்கப்படும்)

இவ்வாறு நீதியும் இரக்கமும் ஒருங்கேயுடைய அவனுக்கு உவமை வேறு இல்லை. அவன் இங்கே இரக்கமுடையவனாக இருப்பினும், அதே நேரத்தில் நீதிபதி. நீதியின்படி தவற்றுக்குத் தக்க தண்டனை யுண்டு. தண்டனையைத் தன் உடலில் ஏற்றுக் கொண்ட அவனை ஏற்று, அவன் நெறியில் நின்றால் மட்டுமே தண்டனையிலிருந்து விடுதலையுண்டு. அல்லது விடுதலை இல்லை. தன் சுய முயற்சியில் எவ்வளவு முயன்றாலும் தண்டனையிலிருந்து விடுதலை இல்லை. விடுதலை இல்லாக் காரணத்தால் அவனை

ஏற்றுக்கொள்ளாத உள்ளத்தில் அமைதி இல்லை. தங்கள் சொந்த முயற்சியில் தோல்வியைச் சந்திக்கின்றனர். பாவத்திலிருந்து விடுதலை பெற எண்ணி எவ்வளவு முயன்றாலும், பூரண வெற்றியை அடைய முடியாத தன்மையை உணருகின்றனர். உணரவே அவர்களுக்கு உள்ளக் கவலை மிகுகின்றது. தவறே இல்லாத ஒருவனுக்கு இக்கவலை தேவையற்றதாகலாம். ஆனால் உண்மை நிலை என்ன? உலகில் பிறந்த எவரும் தவறு செய்வதிலிருந்து தப்ப முடிவதில்லை என்பதை, சிறந்த பக்தர்களாகிய உயர் ஒழுக்கத்தினரிட மிருந்து நாம் அறிகிறோம். அவர்கள் தங்கள் குறைபாடுகளை மிக மனத்தாழ்மையுடன் வெளிப்படையாகக் கூறுகிறார்கள். அவர்கள் நிலையே அவ்வாறானால் சாதாரண மக்களாகிய நம் நிலை என்ன? ஆகவேதான் வரப்போகும் தண்டனையைக் குறித்தும், தற்போது நல்வழியில் நடக்க முடியாத தன்மையை நோக்குமிடத்தும் மனக் கவலை மிகுகின்றது.

இம்மனக் கவலைக்கு மருந்து இறைவனே. எவ்வாறு?

செய்த குற்றத்திற்கு நீதிபதியாகிய அவன் முன் தண்டனையுண்டு. ஆனால் நாம் அடைய வேண்டிய அத்தண்டனைக்குப் பதிலாக, நமக்குப் பிணையாக, அவன் தானே நம்மேல் இரக்கம் உள்ளவனாக, அத்தண்டனையைத் தன்மேல் வரவழைத்தவனாக, ஜீவித்தவனாக, விளங்குகிறான்- ஆகையால் அவன் மூலம் நமக்கு விடுதலை காத்துக் கொண்டிருக்கிறது. இதை ஒரு உதாரணத்தின் வாயிலாக விளக்கலாம்.

முருகன் பத்தாம் நிலையில் பயிலும் மாணவன். தவறு செய்த மாணவர்களுக்குத் தண்டனை விதிப்பது அவ்வகுப்பின் வழக்கம். அன்று முருகன் மூன்று மாணவர்களுடன் ஒரு குற்றத்தில் அகப்பட்டுக் கொண்டான். அவர்கள் குற்றத்திற்காக ஆசிரியர், நீதியின்படி தண்டனையாக இருபத்தைந்து காசு அபராதம் விதித்தார். அடுத்தநாள் பள்ளி துவங்குகிறது. முருகன் அபராதத் தொகை 25 காசு கொண்டு வரவில்லை. மற்ற இருவரும் அபராதம் கட்டி விட்டார்கள். வகுப்பின் முறைமையின்படி முருகன் வெளியே நிற்கவேண்டும்; நிற்கிறான். ஆசிரியர் வகுப்பினுள் நுழைகிறார். முருகனைக் காண்கிறார். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் மீது அவருக்கு இரக்கம் தோன்றுகிறது. முருகனை வகுப்பினுள்ளே அழைக்க விரும்புகிறார். வகுப்பின் நியதிப்படி 25 காசு அபராதம் முருகன் கட்டியாக வேண்டும். அவன் மீது ஆசிரியருக்கு இரக்கம் பொங்குகிறது. ஆகவே அவனுக்காகத் தன் பணத்திலிருந்து 25 காசுகளை எடுத்துத் தனக்கு முன் வைத்து, ''முருகா இந்தப் பணத்தை நீ கட்டவேண்டிய இடத்தில் கட்டி விட்டு உன் இருக்கைக்கு வா; இனி தவறு செய்யாதே'' என அழைக்கிறார். மனக்கவலையோடு வெளியே நிற்கும் முருகன் நிலையை இப்போது கவனிப்போம்.

ஆசிரியர் வைத்துள்ள பணத்தை முருகன் ஏற்றுக்கொண்டால் இவனுக்குத் தவற்றிலிருந்து விடுதலை கிடைத்து, வகுப்பினுள் செல்ல முடியும். ''இவர் என்ன கொடுப்பது? இவர் உதவி எனக்குத் தேவையில்லை'', என எண்ணுவானானால் ஆசிரியர் ஏற்படுத்தி வைத்திருக்கும் விடுதலை இவனுக்கு இல்லை.

இங்கு தண்டனை விதித்ததும் ஆசிரியரே; தண்டனை பெற்றிருப்பதும் ஆசிரியரே. முருகன் வேலையெல்லாம் ஆசிரியர் தனக்காக ஒழுங்கு செய்திருக்கும் விடுதலையை ஏற்றுக்கொள்ளுவது ஒன்றே. முருகன் ஏற்றுக்கொண்டால் விடுதலை. அல்லது விடுதலை இல்லை.

இவ்வாறே, நம் பாவத்திற்கேற்ற தண்டனையை இறைவன் தன் உடலில் ஏற்றுக்கொண்ட காரணத்தால், குற்றவாளியாகிய நமக்கு அவன் மூலம் விடுதலை கிடைக்கிறது. ஆகவே உவமையற்ற அவன் மூலம் நமக்கு விடுதலை கிடைக்கிறது. அவ்வாறு அவனுடைய இரக்கத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு நீதிபரனுகிய அவன் முன் தண்டனை உறுதியாக இருப்பதால் மனக்கவலை மாற்றல் அரிது.

**தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது**

"தண்டனை வரப்போவது பின்னர் தானே; அதை அப்போது பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது இவ்வுலகில் எல்லா இன்பங்களையும், எவ்வளவு அதிகம் அடையமுடியுமோ, அவ்வளவு அடைந்து விடுவதென முடிவு செய்தால், அப்போது மனக்கவலை எங்கே இருக்கிறது?" என நினைக்கலாம், ஆழ்ந்து சிந்தித்தால் இம்முடிவு நடைமுறைக்கு ஒத்துவராததை நாம் காணமுடியும்.

உலகில் இயங்குபவை யாவும், அறம் மறம் என்ற இரண்டுக்குள் செயல்படுகின்றன. அறத்தால் இன்பமும், மறத்தால் துன்பமும் விளைகிறதென்ற நியதியை யாரும் மறுப்பதற்கில்லை. இவ்

வின்பமும் துன்பமும் மனிதனின் இறப்பிற்குப் பின்னர்தான் தோன்றுகிறதென்று கூறமுடியுமா? பின்னர் வரப்போவதன் நிழல் அல்லது சாயல் முன்னர் தோன்றி விடுகிறது. ஆகவே மறம் செய்வோர் துன்புறுதல் இவ்வுலகிலும் நடைபெறுகிறது. துன்பத்திலிருந்து விடுபட எண்ணும் ஒவ்வொருவரும் மறத்தினின்று விடுபட்டு அறம் செய்ய வேண்டும். அறத்தின்படி ஒழுகவேண்டும்; அறவழியில் நிற்கவேண்டும்.

அறவழியில் ஒருவன் நிற்க வேண்டுமானால் அவனுடைய தனித்த முயற்சி மட்டும் போதுமா? போதாது. பொய்தீர் ஒழுக்கமாகவும், நெறியாகவும் விளங்கும் அவனைப் பின்பற்றினால் மட்டுமே அறவழியில் நிற்க முடியும். அவன் வழியில் நிற்காவிடில் அறத்திற்கு மாறான மறத்தினின்றும் விடுதலை பெற முடியாது. ஏனெனில் உலகின் பெரும் பகுதி மறவழியில் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே மறம் மிகுந்த உலகமாம் மறக்கடலிலிருந்து கரையேறி அறமுடையவராய்த் திகழ வேண்டுமெனில், மனிதருக்காகத் தன் ஐம்புலனையும் அவித்து, மனிதருக்கு மேன்மையை ஏற்படுத்தி வைத்திருக்கும் அறக்கடலாக விளங்கும், பேரருள் படைத்த அந்தணனாகிய அவன் பாதம் சேர்ந்தார்க்கே முடியும். அவன் பாதம் சேராத மற்றவர்களுக்குத் தீமையாகிய மற ஆழியிலிருந்து கரையேற முடியாது.

*அறவாழி யந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்*
*பிறவாழி நீந்த லரிது.*

இருள்சேர் இருவினைகளுள் மனிதன் தன் வாழ்நாளில் செய்யும் பாவம் காரணமாக ஏற்படும் வினையி

லிருந்து நீங்கும் வழி கூறினர். மறமாம் பாவத்தைக் கடக்கும் வழி அறக்கடலாகிய இறைவனே.

இச்செய்யுளுக்கும் இறுதிச் செய்யுளுக்கும், வேறுபாடு என்ன? இரண்டு செய்யுளுள்ளும் இறைவன் தாளாகிய அடியைச் சேராதவர் ஆழியாகிய கடலை நீந்தார் எனக் கூறுகிறார். இரண்டு செய்யுளுள்ளும் அவர் இரு கடல்களைக் கூறுகிறார். இரு கடலும் குறிப்பது ஒரே பொருளா? வெவ்வேறு பொருளா? சிந்திக்க வேண்டிய ஒன்று. ஒரே பொருளானால் கூறியது கூறலென்னும் குற்றம் தோன்றும். வள்ளுவர் இக்குற்றத்திற்குட்பட்டுச் செய்யுள் செய்யார். இரண்டையும் நோக்கின்,

(1) அறவாழிக்கு மாறான பிறவாழி

அறத்திற்கு மாறானது மறம். அதாவது பாவம்; அதாவது பிறவாழிஎன்பது பாவக் கடல்.

(2) பிறவிப் பெருங்கடல்—

முதலில் கூறப்படுவது கடல். இரண்டாவது கூறப்படுவது பெருங்கடல்.

முதலில் கூறப்பட்ட கடலை நீந்துதல் அரிது. இரண்டாவது கூறப்பட்ட பெருங்கடலை நீந்தார்.

ஆகவே இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. இரண்டும் தீமை பயப்பது. இருளில் சேர்க்கக் கூடியது. ஒன்று பாவம்; மற்றொன்று பிறவி. பாவத்திலிருந்து தனித்த, இறைவனற்ற முயற்சியால் வெற்றி பெறுதல் அரிது. அவன் துணை இருப்பின் எளிது. இது மனிதன் தன் வாழ்நாளில் செய்யும் பாவத்தைக் குறிக்கிறது. அறவழியைக் காட்டி

யுள்ள அறக்கடலான அந்தணனை இறைவன் வழியில் நின்றால் பாவத்தைக் கடத்தல் எளிது.

அடுத்தது, இவன் முன்னோர் செய்த பாவம் காரணமாகப் பரம்பரையாகத் தொடர்ந்து வரும் பிறவிப் பெருங்கடல். இது இவன் முயற்சிக்கு உட்பட்டதல்ல. ஆகவே இவன் எவ்வளவு முயன்றாலும் தனித்த நிலையில் இதிலிருந்து விடுபடவே முடியாது. இறைவனடி சேராதார் இப்பெருங் கடலை நீந்தவே நீந்தார். ஆகவே இறைவனை ஏற்றுக்கொண்டே யாகவேண்டும். ஏற்றுக்கொள்ளாதவருக்கு விடுதலையே இல்லை. இந்நிலையும், நாம் முன்பு கண்ட முருகன் நிலையும் ஒன்றே. ஏற்றுக்கொண்டால் உடன் விடுதலை. இல்லையெனில் விடுதலை இல்லை. நீதியையுடைய இறைவனிடம் இரக்கமும் இருக்கிறது. நம்முடைய தண்டனையை அவன் தன் உடலில் அடைந்து ஐந்தவித்தவனாகி, விடுதலையை ஏற்படுத்தி வைத்திருக்கிறான். அவ்வைந்தவித்தவனாகிய இறைவனை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு விடுதலையே இல்லை என வள்ளுவர் தம் கடவுள் வாழ்த்தை முடிக்கிறார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்

முன்பு விடுபட்டதை நோக்குவோம்.

## பொறி

'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்பதன் கண்ணுள்ள ஐந்தவித்தானைக் கண்டோம். இனி பொறிவாயிலைக் காண்போம். இதோடு தொடர்புடைய கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றை இது வரை விட்டு வந்துள்ளோம். இப்போது அதைக் காண்போம்.

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

இக்குறட்பாவின்கண் உவமையணி சிறந்து விளங்குகிறது. உவமை கையாளப்படுவதன் காரணம் என்ன? அறிவதற்குக் கடினமான பொருளை விளக்கிக் காட்டும் பொருட்டு, அறிவதற்கு எளிதான பொருள் உவமையாகக் கையாளப்படுகிறது.

இக்குறளில் அறிவதற்குக் கடினமான பொருள் என்ன? தாளை வணங்காத் தலை பயனற்றது. தலை காட்சிப் பொருளாக இருப்பினும் அது உணர்த்த வேண்டியதை உணர்த்தாவிடத்து அதனால் பயனில்லை. வாலறிவன் நற்றாள் தொழாக் கல்விபோல் பயனில்லை. எண்குணத்தான் தாளை வணங்காத் தலை குணமில்லை.

வீதி பழுது பட்டுள்ளதை உணர்த்தும் குறியொன்று வண்டிகளுக்கு முன்னறிவிப்பாகப் பழுது பட்டுள்ள இடத்திற்குச் சற்று முன் வைக்கப்பட்டுள்ளது. வருகிற வண்டியோட்டிகளுக்கு அது தன் பொருளை உணர்த்த வேண்டும். வருகிற வண்டியோட்டிகளுக்கு அது தன் பொருளை யுணர்த்தாவிடில் அக்குறியினால் பயன் இல்லை. பொருளை யுணர்த்தாக் குறி அங்கிருந்தும் பயனின்றி வண்டியோட்டி துன்பத்திற் குள்ளாகிறான். இங்கே நாம் ஆழ்ந்து நோக்க வேண்டிய குறிப்பு ஒன்றுண்டு.

வீதியிலே வைக்கப்பட்டுள்ள குறி அங்கேயே இருக்கிறது. அதற்கு எவ்விதக் கேடும் இல்லை. முழு அளவில் இருக்கிறது. எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் எவ்விதத்திலும் பழுதுபடாமல் இருக்கின்றன. ஆனால் அது அங்கிருந்தும் அதனால் பயன் இல்லை. ஏன்? அது இருக்க வேண்டிய

முறையில் இல்லாமல் வண்டியோட்டி வரும் திசைக்கு எதிராக வேறு திசையில் திருப்பப்பட்டுள்ளது. ஆகவே அக்குறி அங்கே வைக்கப்பட்ட அடையாளத்தால் பயன் இல்லை. அவ்வாறே புலன்கள் வேலை செய்தாலுங்கூட இறைவனைப் பணியாத தலையினால் பயன் இல்லை.

தலை என்பது இங்கு தலையாகிய உறுப்பைமட்டும் குறியாது தலையையுடைய முழு மனிதனையே குறித்து நிற்கிறது. இறைவன் தாளை வணங்காத மனிதன் பயனற்றவன். காட்சியளவில் அவன் மனிதனே. ஆயினும் கொள்கை நிறைவேற்றம் இல்லாத குறியினால் குணமில்லை; அவ்வாறே எண் குணத்தான் தாளை வணங்காத் தலையால், தலையையுடைய மனிதனால் பயனில்லை.

**கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான்**
**தாளை வணங்காத் தலை**

"எண் வகைப்பட்ட குணங்களையுடையானது தாள்களை வணங்காத் தலைகள் கொள்கையில்லாத பொறிகள் போலப் பயன்படுதலுடையனவல்ல" எனப் பரிமேலழகர் உரை கூறிப் பின்னர் விளக்கத்தினுள் பொறி என்பதற்கு ஐம்பொறியைப் பொருளாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐம்பொறியும் ஒருங்கே அடங்கியது தானே தலை. ஐம்பொறியும் ஒருங்கே அடங்கிய அத் தலைக்கு உவமையாக மீண்டும் ஐம்பொறியையே வள்ளுவர் கூறியுள்ளார் என்பது பொருந்துமா?

பொறி என்பதற்கு ஐம்பொறி என்னும் பொருளைக் கொள்ளுவதைவிட நாம் முன்பு பார்த்த

படி சின்னம், குறி, அடையாளம் எனப்பொருள் கொள்வதே சிறப்பு.

"குடங்கை நெடுங்கண் பிறழ ஆடாமோ ஊசல்
கொடுவிற் பொறி பாடி ஆடாமோ ஊசல்"

சிலம்பு—வாழ் 20

இங்கு இளங்கோவடிகள் பொறி என்னும் சொல்லை அடையாளம், குறி, சின்னம் என்ற பொருளில் பயன்படுத்தி இருப்பது நோக்கத் தக்கது'.

எக்கருத்தை விளக்க வேண்டுமானாலும் நாம் குறியை, சின்னத்தைப் பயன்படுத்துகிறோம். விற்குறி சேரர் ஆட்சியை விளக்குகிறது. சூலமும் வேலும் சைவ சமயத்தை விளக்குகின்றன. அசோகச் சக்கரத்துடன் கூடிய மூவண்ணம் இந்திய ஆட்சியை விளக்குகிறது. சிலுவைக்குறி சிலுவையில் தம்மைப் பலியாக்கிய இயேசுவை விளக்குகிறது.

மேலே கண்ட இக்குறிகளை நாம் நோக்குங் கால் அவை நமக்குக் கோளில் பொறியாகக் காட்சி தராது, கொள்கையுள்ள பொறிகளாக விளங்கு கின்றன.

இனி

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார்

என்னும் குறட்பாவிலுள்ள 'பொறிவாயில் ஐந்த வித்தான்' என்னும் தொடரை எடுத்துக் கொள்ளு வோம்.

பொறி—ஐம்பொறி
வாயில்—ஐம்பொறி

ஐந்து—ஐம்பொறி வழியாயுள்ள ஐம்புலன். 'ஐந்தவித்தான்' எனக் கூறினுல் போதாதோ? பொறிவாயில் ஐந்தவித்தான் எனக் கூற வேண்டுமோ? நீத்தார் பெருமையின்கீழ் 'ஐந்தவித்தான்' என்று மட்டும் கூறுமிடத்து ஐந்து என்பது ஐம்புலனையும் உணர்த்தவில்லையா? அவ்வாறே 'ஐந்தடக்கல்', 'ஒரைந்துங்காப்பான்', 'ஐயுணர்வு' எனத் தொகையாகக் கூறிப் பொருள் விளக்கவில்லையா?

கடவுள் வாழ்த்தில் பொறிவழியாகவுள்ள புலன் ஐந்து என விளக்கிக் கூறிப் பின்னர் தொகையாகக் கூறினர் எனின்,

**கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றறியும் ஐம்புல**
**மொண்டொடி கண்ணே யுள**

எனப்பின்னரும் விரித்துக் கூறவேண்டிய காரணம் என்ன? வீணுக எச்சொல்லையும் பயன் படுத்தாதவர் வள்ளுவர்.

*பயனில சொல் பாராட்டுவானை மகனெனல்*
*மக்கட் பதடி யெனல்*

எனக்கூறியவர் பயனற்ற முறையில் சொல்லை பயன்படுத்தி இருக்க முடியாது. பயனற்ற முறையில் இருப்பதாக நாம் கருதும் சொற்களுக்கு வேறு பொருள் இருக்கக்கூடும். அதைக் காண்பதே சிறப்பு 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்னும் தொடரில் 'ஐந்தவித்தான்' என்னும் சொல்லுக்கு ஐம்புலனையும் பலியுணவாக்கினுன் எனப் பொருள்

கண்டோம். மீதமுள்ள 'பொறிவாயில்' என்பதில் 'பொறி' என்பது நாம் முந்திய குறட்பாவினுள் பார்த்தபடி குறி, அடையாளம், சின்னம் என்னும் பொருளையே இங்கும் உணர்த்துவது பொருத்தமாக உள்ளது.

இனி இதுவரை நாம் பார்த்தவைகளைத் தொகுத்துக் காண்போம்,

**வள்ளுவரின் இறைக்கொள்கை**

1. உலகமும் உயிர்களும் இறைவனால் படைக்கப்பட்டவை.

2. இறைவன் நீதிபதியாய் விளங்கும் நியாயத் தீர்ப்புநாள் உண்டு.

3. பாவக்கடல், பிறவிப்பெருங்கடல், ஆகிய இருளில் சேர்க்கும் இருவினையுண்டு.

4. இவைகளிலிருந்து விடுதலையைக்கொடுக்க இறைவனே ஐம்புலனுடன் கூடிய மனிதனாக இப்பூவுலகில் வந்தார்.

5. தம்மைத் தாமே பலியாக்கி மனிதருக்கு விடுதலையை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்.

6. அவர் தம்மைப் பலியாக்கியதை உணர்த்தும் சின்னம் (பொறி) ஒன்றுண்டு.

7. வள்ளுவர் தம் நூலுள் விளக்கும் ஒழுக்க நெறியைக் காட்டியவன் ஐந்தவித்தவனாகிய இறைவனே.

8. மனிதர் மனக்கவலையை மாற்றும் மருந்து அவனே.

9. பாவக்கடலிலிருந்து மனிதரைக் கைதூக்கி எடுப்பவனும் அவனே.

10. அவனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் பரம்பரை பரம்பரையாக வரும் பிறவிக் குற்றமாம் பிறவிப் பெருங்கடலிலிருந்து கரையேருது அமிழ்ந்து அழிவர்.

இறைவன் பூமியிலே ஐம்புலனோடு மனிதனுகத் தோன்றினுன் என்ற நிலையை வள்ளுவர் திட்டவட்டமாகக் கூறுகிருர். அருவமான இறைவன் உருவமானுன் என்பது மிகத் தெளிவுபட்ட ஒன்று. இறைவனே மனிதனுகி ஐம்புலனையும் அவித்தான் என்ற காரணத்தால் இறை வணக்கத்தில் 'ஐந்தவித்தான்' எனக் கூறினர்.

மனிதனுனது இறைவனே என்ருலுங்கூட மனிதனுன பின் அவன் பூரண மனிதனுகவே விளங்கி மனிதருக்கு வழியைக்காட்டிய காரணத்தால், மனிதருள் சிறந்த உயர்ந்த நிலையாம், நீத்தார் பெருமையிலும் 'ஐந்தவித்தான்' எனக் கூறினுர்.

நீத்தாருக்கும் துறவிக்கும் வேற்றுமையுண்டு. துறவியையும்விடச் சிறந்தவரையே நீத்தார் எனக் குறிப்பிட்டுள்ளார் வள்ளுவர். எந்தத் துறவியும் இல்லறத்தின் பயனுய்த் தோன்றியவனே. ஆகவே துறவறத்தையும் துறவியையும் இல்லறத்தின பின்வைத்தார். 'நீத்தார்' என்பது மனிதனு

கத் தோன்றிய கடவுளைக் குறிக்கும் காரணத்தால் கடவுள் வாழ்த்திற்குப் பின் வைத்தார். மனிதனு கத் தோன்றிய கடவுள் மனிதர் நடத்தும் இல்ல றத்தின் பயனாகத் தோன்றியவர் அல்லர். ஆகவே இல்லறத்திற்கு முன் வைத்தார்.

இறைவன் மனிதனைத் தோன்றி மனித ருக்கு அறநெறியைக் காட்டிய காரணத்தால் நீத் தார் பெருமைக்குப் பின் அறன்வலியுறுத்தலை வைத்தார்.

ஆகவே மேலே நாம் இதுவரை கண்டவை களிலிருந்து ஐந்தவித்தான் என்பது மனிதனாக வந்த இறைவனையே குறிக்கிறதென்பது தெளிவா கிறது.

ஐந்தவித்தானைக் கண்டோம். இனி இவ் வைந்தவித்தானுடைய ஆற்றலைக் குறித்துச் சான்று பகரும் இந்திரனைக்காண்போம்.

# இந்திரன் யார்?

இந்திரன் என்னும் சொல் குறித்து நிற்கும் பொருளென்ன? தேவர்கோன், அரசன், தலை வன், முதலியன. யாருக்குத் தலைவன்? பின்னர் பார்ப்போம்.

இந்திரன் என்ற சொல் வழக்கு, ஒரு குறிப் பிட்ட மதத்திற்கு உரியது அன்று. தமிழகத்தி

லிருந்த எல்லாமதங்களிலும் அச்சொல் எடுத்தாளப் பட்டிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு மதத்திலும் இந்திரனுக்கு வெவ்வேறு குணச்சிறப்புகள் கூறப் பட்டுள்ளன. தூய்மை அல்லது பரிசுத்தத்தை விரும்பும் சமயங்கள் அவனைப் பரிசுத்தமுள்ளவனு கச் சித்திரிக்கின்றன. எல்லாக் குணங்களையும் ஏற்றுக் கொள்ளும் சமயம், அவனை எல்லாக் குணங் களும் உடையவனுகச் சித்திரிக்கின்றது.

ஆனால் மொத்தத்தில் நாம் காணக்கூடிய முக்கியமான ஒன்று, மதங்கள், இறைவனையும், மனிதனையும் மாத்திரம் கூறுவதுடன் அமையாது, மூன்ருவது ஒரு பிரிவினரையும் பற்றிக் கூறுகின் றன. அப்பிரிவினரை உலகில் தோன்றிய எந்த மதமும் கூருது விடவில்லை. அப்பிரிவினரே தேவர் கள். அதாவது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடைப்பட்ட நிலையுடையவர்களாய், பலசமயங்ளில் இறைவனையும் மனிதனையும் தொடர்புப் படுத்துகிற வர்களாய், இறைவனது செய்தியாம் தூதை மனி தர்களுக்குத் தெரிவிக்கும் தூதர்களாய், இறைவனைச் சூழ இருக்கும் இறைவனது படை வீரர்களாம் கணங்களாய்ச் சித்திரிக்கப் படுகின்றனர்.

இவ்வாறு தூதர்களாய், ஏவலராய், கணங் களாய்ச் சித்திரிக்கப்படும் தேவர்களுக்கு ஒரு தலை வன் ஒவ்வொரு மதத்திலும் கூறப்படுகிறன். அவ் வாறு கூறப்படும் தலைவனுக்கு நம் தமிழகத்தில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பெயரே இந்திரன்.

“இந்திரன் என்ற சொல் ஆரியச் சொல் அன்று. ஆரிய மொழி எதனிலும் அதற்கு வேர்ச் சொல் கிடையாது. தொடர்புடைய சொல்லும் கிடையாது. ஆனால் தமிழில் அதற்கு வேர்ச்

சொல், வேர்ப்பண்பு, தொடர்புச் சொற்கள் யாவும் உண்டு. இந்திரன் என்ற சொல் இன்திரம் என்ற தொகையின் மிகத்தொல் பழங்காலத் திரிபே யாகும்.,,

[மணிவிளக்கவுரை 1 பக்: 648
பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்.]

ஆகவே இந்திரன் என்பது தமிழுக்கே யுரிய சொல். இவ்விந்திரனது தன்மை, நாம் முன்பு பார்த்தது போன்று சமயத்திற்குச் சமயம், அச்சம யம் இறைவன் தன்மையை விவரிப்பதற்கேற்ப மாறுபட்ட முறையில் மாறுபட்ட குணங்களுடன் விளக்கப்படுகிறது.

இறைவன், கடவுள், என்னும் பெயர்கள் எவ் வாறு ஒல்வொரு சமயத்திலும் தனிப்பட்ட முறை யில் கூறப்படும் இறைவனுக்குப் பொதுப் பெயர் களாய்த் தமிழ் மொழியில் அமைக்கப் பட்டிருக்கின் றனவோ, அவ்வாறு, தேவர்கள் அல்லது தூதர்களின் தலைவனுக்கு, இந்திரன் என்னும் பெயர் தமிழ் மொழியில் அமைக்கப் பட்டிருக்கும் பொதுப் பெயரேயன்றி, அது குறிப்பிட்ட சமயத்திற்குரிய தனிப்பெயர் அன்று. முக்காலமும் முன்னரே யுணர்ந்த வள்ளுவப் பெருந்தகை, தமது குறட் பாவினுள் 'இந்திரன்' என்று மாத்திரமே கூறினல், வாதப் பிரதிவாதங்கள் தோன்றக்கூடும் என்பதை யுணர்ந்து இதை விரித்து, இறைவனுக்கும் மனித னுக்கும் இடைப்பட்டவர்களாய், அகன்ற வானத் திலே யுள்ளவர்களின் தலைவனாகிய இந்திரன் என அக்கருத்தைத் தெளிவாய் விளக்கி, அகல்விசும் புளார் கோமான் இந்திரன், அகன்ற ஆகாயத்தி லுள்ளவர்களின் தலைவனாகிய இந்திரன் எனக்கூறி

யுள்ளார். அகன்ற ஆகாயத்திலுள்ள தேவர்களைக் கூறும் சமயங்களுக்கெல்லாம், தேவர்களின் தலைவனான இந்திரன் என்னும் சொல் பொருந்தும். ஆகவே மேலே நாம் கண்டவைகளிலிருந்து இந்திரன் என்னும் சொல், எந்தக் குறிப்பிட்ட ஒரு மதத்தையும் உணர்த்தாமல் எல்லா மதத்திற்கும் பொதுவாய், தேவர்கள் அல்லது தூதர்களின் தலைவன் என்னும் பொருளை மாத்திரமே விளக்குவதற்காக ஆளப்பட்டுள்ளது என்பது மிகத் தெளிவு பட்ட ஒன்று.

எனவே 'ஐந்தவித்தான்' என்னும் சொல் மனிதனைத் தோன்றிய இறைவனையும், இந்திரன் என்பது தேவர்கள் அல்லது தூதர்களின் தலைவனையும் உணர்த்தி நிற்கின்றனவென்பதும் தெளிவு.

# எங்கே?

இப்போது வள்ளுவர் சுட்டும் வரலாற்றுக்கு வருவோம். மனிதனைத் தோன்றிய இறைவனுடைய ஆற்றலுக்குத் தூதர்களின் தலைவனே சான்று.

மனிதனைத் தோன்றிய இறைவனைக் கூறும் சமயங்கள் எவை? அவ்விறைவன் குணங்களாகச் செயல்களாக—நாம் முன்பு கண்டவைகளை நிரல் படக்கூறும் சமயம் எது? இவை யாவற்றிற்கும் தொடக்கம்முதல் இறுதிவரை நாம் கண்ட இந்திரன்

சான்று பகர்ந்ததாகச் சொல்லப்படும் வரலாறு எங்கே யுள்ளது?

மேலே கண்ட கேள்விகள் அத்தனைக்கும் விடையளிக்கும் சமய வரலாறு எங்கே யுண்டு? அச்சமய வரலாறு கட்டுக் கதையுடன் அன்று, வரலாற்றுடன் இணைந்ததாக இருக்குமானால் நாம் அதை ஏற்றுக் கொள்ளுவதில் தவறில்லை.

இனி சமய வரலாறுகளை நோக்குவோம். திருவள்ளுவர் காலத்தில், நம் தமிழகத்தில் விளங்கிய சமயங்களையும், அவற்றின் அடிப்படைக் கொள்கைகள் வள்ளுவத்துடன் கொண்டுள்ள தொடர்புகளையும் நமது முந்திய நூலாகிய 'திருவள்ளுவர் கிறித்தவரா?' என்பதில் தெளிவாகக் கண்டுள்ளோம். இப்பொழுது நாம் இந்நூலில் இதுவரை பார்த்த வள்ளுவரின் இறைக்கொள்கை எச்சமயத்துடன் தொடர்புடையது எனக் காணின் வள்ளுவரின் ஐந்தவித்தான் யார்? என்பது தெளிவு படும். முதற்கண் சமணத்தை நோக்குவோம்.

**சமணம் :—**

சமண சமயத்தில் இறைக் கொள்கை கிடையாது. இறைவனால் படைக்கப்பட்டது உலகமும் அதிலுள்ள உயிர்களும் என்ற கொள்கையைச் சமணர் ஏற்றுக்கொள்ளாது மறுக்கின்றனர். மனிதன் சிறந்த நிலையில் வாழ்ந்து முக்தி நிலையை, அதாவது மற்றவர்கள் கூறும் இறைவன் நிலையை அடைகிறான் என்பதே சமணத்தின் சாரம். எனவே இறைவன் மனிதனானான் என்பது மறுக்கப்பட்டு, மனிதன் இறைவனாகிறான் என்பதே சமணக்கொள்

கையாகிறது. இக்கொள்கை வள்ளுவத்திற்கு நேர் முரணானது.

வள்ளுவர் திட்டமான கடவுட் கருத்துடையவர். பிறவிப் பெருங்கடலை இறைவனடி சேராதார் நீந்தவே முடியாது எனத்திட்டமாய்த் தெளிவாய்க் கூறுகின்றார். இங்கு இறைவன் என்பது சமணர் கொள்கைப்படி தீர்த்தங்கரர் இருபத்து நால்வருக்கும் பொருந்தாமையை அறிக இறைவன் என்பது தீர்த்தங்கரரைக் குறிக்குமானால்:— தீர்த்தங்கரர்கள் இறைவன் நிலைக்கு வந்த மனிதர்களாகச் சொல்லப் படுபவர்கள். அவர்களின் தொடக்கம் மனிதர்களாகக் கூறப்படுங் காரணத்தால் இவர்களும் பிறவிப் பெருங்கடலை நீந்தியாக வேண்டியவர்களே. இவர்கள் கரையேறியதற்கு யார் காரணம்? பின்னவர்களுச்கு முன்னவர் காரணமானால், முதல் தீர்த்தங்கரர் கரையேறியதற்கு யார் காரணம்? அவருக்கு முற்பட்டவர் இல்லையே. கடவுள் கொள்கையும் அவருக்கு இல்லை. அப்படியானால் முதல் தீர்த்தங்கரருக்கு இறைவன் யார்? எவ்வாறு முதல் தீர்த்தங்கரர் பிறவிப் பெருங்கடலை நீந்தினர்! இறைவனடி சேராதார் நீந்தார்' எனத் திருவள்ளுவர், சமணத்தைப் பின் பற்றினால் எவ்வாறு திட்டமாகக் கூற முடியும்? ஆகவே அடிப்படையிலேயே வள்ளுவருக்கும் சமணத்திற்கும் தொடர்பில்லை.

அடிப்படையே முரணுவதால் மனிதனைத் தோன்றிய இறைவனின் மற்றக் குணங்களைச் சமணத்தில் காண்பது என்பது இல்லை. இறைவனே இல்லை எனக்கூறும் சமயத்தில் வள்ளுவரின் இறைக் கொள்கைக்கு இடமேது?

ஆகவே வள்ளுவர் கூறும் 'ஐந்தவித்தான்' சமணத்தில் இல்லை. இவ்வகையில் வள்ளுவத்திற்கும் சமணத்திற்கும் தொடர்பில்லை. இறைக்கொள்கையைப் பொறுத்த அளவில் சமணமும் பௌத்தமும் ஒன்றே. ஆகவே இத்துடன் பௌத்தமும் அடங்கி விடுகிறது. மேலும் விரிவு வேண்டுவோர் 'திருவள்ளுவர் கிறித்தவரா?' என்ற நூலில் "திருவள்ளுவர் சமண சமயத்தவரா?" என்ற அதிகாரத்தைப் பார்க்கவும்.

**வைதிகம்:—**

உலகம் இறைவனால் படைக்கப்பட்டது. இறைவன் உலகில் மனிதனாய் வந்தான் என்பன வைதிகக் கொள்கையில் உண்டு. மனிதனாக மட்டுமன்றி விலங்காகவும் விலங்குக்குக் கீழ்ப்பட்ட உயிராகவும் வந்ததாகப் பற்பல கதைகள் பேசப்படுகின்றன. மனிதனாகவும் ஒரு முறை மட்டுமின்றி பல சமயங்களில் வந்ததாகக் கூறப்படுகின்றது.

இவ்வைதிகக் கொள்கையில் ஓரளவு ஒற்றுமை காணப்படினும், அடிப்படை வேற்றுமைகள் பல காணப்படுகின்றன.

வள்ளுவர், இறைவன் ஐம்புலனோடு கூடிய மனிதனாக வந்ததை மட்டுமே ஏற்றுக் கொண்டுள்ளார்; மற்றவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. வைதிகக்கொள்கையில், நியாயத் தீர்ப்பு நாள் என்பதும் இறைவனே பெரிய நியாயாதிபதி என்பதும் இல்லை. உயிர்களே தங்கள் செயலுக்குத் தக்கபடி விதிவழி இன்பமோ துன்பமோ அனுபவிக்கின்றன எனக் கூறப்படுகிறது.

இருளில் சேர்க்கும் இருவினையாகிய, பாவக் கடல், பிறவிப் பெருங்கடல் ஆகிய இரு தீவினைக் கொள்கை வைதிகத்தில் கிடையாது.

இறைவன் மனிதனாக வந்து, மனிதருக்கு வழியாக விளங்கி, மனிதர்களுக்காகத் தன்னையே பலிப்பொருள் ஆக்கினான் என்று ஏற்றுக்கொள்ளும் நிலை வைதிகத்தில் இல்லை. ஆகவே அதை வெளிப் படுத்தும் அடையாளமோ, அதற்கு இந்திரன் சான்று கூறும் சிறந்த ஆற்றல் வெளிப்பட்ட தன் மையோ வைதிகத்தில் எங்குமே இல்லை. இறைவனை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு விடுதலையே கிடை யாது என்ற வள்ளுவர் கூற்றுக்கு வைதிகத்தில் இடம் இல்லை. இறைவனையே எண்ணாது சுயமுயற்சியினா லும் நற்செயல்களாலும் விடுதலை அல்லது வீடு பேறு பெறலாம் என வைதிகக் கொள்கை கூறு கிறது.

ஆகவே வைதிகத்திற்கும் வள்ளுவத்திற்கும் இக் கொள்கையில் தொடர்பில்லை. வைதிகம் என் பதனுள் இந்து மதக் கருத்துக்கள் அடக்கப்பட்டு விட்டமையால் இந்து மதத்திற்கும் வள்ளுவருக்கும் தொடர்பில்லை என்றாகிறது. இதனினும் விளக்கம் பெற வேண்டுவோர் 'திருவள்ளுவர் கிறித்தவரா? என்ற நமது முந்தைய நூலின் ''திருவள்ளுவர் இந்து சமயத்தவரா?'' என்ற தலைப்பு காண்க. அடுத்து வள்ளுவர் காலத்தில் தமிழகத்தில் காணப் பட்ட கிறித்தவத்தோடு ஒப்பு நோக்குவோம்.

**கிறித்தவம் :—**

வள்ளுவரின் இறைக் கொள்கையாக நாம் மேலே கண்ட கொள்கைகளைத் தன்னகத்தே

கொண்டு விளங்கும் சமயமாகக்கிறித்தவம் காணப் படுகிறது. கிறித்தவக்கொள்கையின்படி இறைவனே உலகையும் உயிர்களையும் படைத்தவன். இறை வனே மகா பெரிய நீதிபதி; மனிதருக்கு நியாயத் தீர்ப்பின் நாள் ஒன்றுண்டு. இருளில் சேர்க்கும் இரு தீவினையாகிய பாவக்கடல், பிறவிப் பெருங் கடல் கொள்கை கிறித்தவத்தில் உண்டு. இறைவன் ஐம்புலனோடு கூடிய மனிதனாக இப்பூமிக்கு வந்து மனிதர் விடுதலைக்காகத் தன்னைத் தானே சிலுவை யில் பலிப்பொருளாக ஒப்படைத்து, மக்களுக்கு விடுதலையை ஏற்படுத்திவைத்துள்ளான் என்பவை கிறித்தவத்தில் சொல்லப்படும் மூலக்கருத்துக்கள். அவன் பலிப்பொருளானதைக் குறிக்கும் சின்னமே சிலுவைக் குறியாகிறது. பிறவிப் பெருங்கடலை நீந்து வதற்கு இயேசு கிறித்து ஒருவரே வழி. அவருடைய பாதங்களைச் சேராதவர்களுக்கு விடுதலை இல்லை என்பதே கிறித்தவம். அவர் காட்டிய பொய்தீர் ஒழுக்க நெறியே கிறித்தவர்களின் வேதம்.

ஆகவே கிறித்தவமும் வள்ளுவமும் மிக நெருங் கிய ஒற்றுமையுடன் விளங்குகின்றன. வள்ளுவர் கூறும் ஐந்தவித்தானை எல்லா விதங்களிலும் பொருத்தமாக விளங்கக் கூடியவராக இயேசு கிறித்து காணப்படுகிறார். ஐந்தவித்தான் அதா வது தன்னையே பலியாக்கியவன் - இயேசு கிறித் துவைக் குறித்தால், பலிப்பொருளின் பகுதியை மக்கள் உண்ணும் வழக்கத்திற்கிணங்க இயேசு கிறித்துவையே உண்டார்களா? அவன் நிரந்தரப் பலியெனக் கூறப்பட்டால் அதனை நிரந்தரமாக அதாவது எப்போதும், ஏன்? இப்போதும் உண்ணு கிறார்களா? இது என்ன பொருத்தமற்ற கேள்வி? என நமக்கு எண்ணத்தோன்றலாம் ஆனால் உண்மை நிலையில் இயேசு நிரந்தரப்பலியானால் பலியின்

பிற்பகுதி நடைபெற்றுத்தானே ஆகவேண்டும்? இந்நடைமுறை யுண்டா?

இயேசு கிறித்து தம்மைத்தாமே சிலுவையில் பலியாக்குவதற்கு முன்னர், தாம் பலியான பின், இப்படிப்பட்ட, தம்மையே மக்கள் உண்ணும் இம்முறைநடைபெற வேண்டுமெனக் கட்டளையிட்டு, பின்னர் வரப்போவதன் அடையாளமாக முன்னர் தம் மாணவர்களுக்குத் தாமே இதைக் கற்றுக் கொடுத்தார் எனக் கிறித்தவர்களின் திருமறை கூறுகிறது.

"அப்பத்தை எடுத்து, நன்றி கூறி, பிட்டு அவர்களுக்கு அளித்து, "இது உங்களுக்காக அளிக்கப்படும் என் உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார். அவ்வாறே உணவு அருந்திய பின் கிண்ணத்தை எடுத்து, "இக்கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படும் என் இரத்தத்தினாலாகும் புதிய உடன்படிக்கை" என்றார் (லூக்கா, 22: 19–20.)

"நானே வானின்று இறங்கி வந்த உயிருள்ள உணவு. இதை யாராவது உண்டால் அவன் என்றுமே வாழ்வான். நான் அளிக்கும் உணவு உலகம் உய்வதற்காகப் பலியாகும் என் தசையே" என்றார்." (அருளப்பர். 6 :51.)

இயேசுவின் இரத்தத்தையும், உடலையும் கிறித்தவர்கள் இன்றும் 'நன்மை பெறுதல்' அல்லது 'நற்கருணை பெறுதல்' அல்லது 'ஐக்கியப் பந்தியில் சேர்தல்' என்னும் தொழுகை முறையில் உண்ணுவதாகக் கொள்ளுகின்றனர். இந்த நடைமுறை எல்லாக் கிறித்தவ சபைகளிலும் இன்றளவும்

நடைமுறையில் இருந்து வருகிறது. ஆகவே பலிப் பொருள் உண்ணப்படுகிறது.

## ஆற்றல்

நாம் இதுவரை கண்டுள்ளதின்படி, ஐந்து வித்தாளுகக் காட்டப் படுபவர் இயேசுகிறித்துவா ஞல் அவரது ஆற்றல், மற்றவர்களினின்றும், மேன்மையாக – உயர்ந்ததாக – எவ்வாறு விளங்கியது? மற்றவர்கள் செய்ய முடியாத எதைச் செய்தார்?

இறைவன் மனிதனுக வந்ததாகக் கூறப் படும் மற்றவைகளுக்கும், இயேசுவின் வரலாற் றிற்கும் ஒரு முக்கிய குறிப்பிடத்தக்க, வேறுபாடு காட்டப்படுகிறது. அது என்ன? மற்றவைகளி லெல்லாம் மனிதனுக வந்த இறைவனைக் கூறிமுடிக் கும்பொழுது, அந்த முடிவு சாதாரண மனிதனுக்கு ஏற்படும் முடிவாகவே கூறப்படுகிறது. எந்த மனி தனுடைய வரலாறும் அவனது இறப்புடன் முடி வடைகிறது. இறைவன் மனிதனுஞன் என்ருல் அவனுக்கும் மனிதனுக்கேற்படும் முடிவாகிய இறப்பு ஏற்படவேண்டியது அவசியமே. ஆனுல் அத்து டன் முடிவடைந்தால் சாதாரண மனிதனுக்கும், மனிதனுக வந்த இறைவனுக்கும் வேற்றுமையில்லை. ஆகவே, மனிதனென்ற முறையில் அவனுக்கு இறப்பு ஏற்பட்டாலும், இறைவன் என்ற முறையில் அவனதினின்றும் வேறுபட வேண்டியதும், இந்த மாற்றத்தைக் காட்ட வேண்டியதும் அவசியமே. இந்த மாற்றமாகிய ஆற்றல் சாதாரண மனிதனுக்கு முடியாதது. மனிதனுக வந்த இறைவனுக்கு முடியக் கூடியதே. இதுவே இறைவனின் தன்மையை வெளிப்படுத்தும் இறையாற்றல் எனக் கொள்ளப் படுகிறது. மனிதனுக வந்த இறைவனுகிய இயேசு

கிறித்து மனிதனைப்போல, சிலுவையில்மரித்துப்பின் மனித ஆற்றலுக்கு மேற்பட்டு, மூன்றும் நாள் உயிருடன் எழுந்ததன் மூலம் இறையாற்றலை வெளிக்காட்டினார் எனக் கிறித்தவர்களால் கூறப்படுகிறது. இது சிறந்த ஆற்றலே. ஆகவே ஆற்றல் சிறப்பும் இயேசுவிற்கு இருக்கிறதை நாம் காணுகிறோம். வள்ளுவர் கூறும்ஐந்தவித்தவனாக இயேசு பெருமானும், ஐந்தவித்தான் ஆற்றலாக, இயேசு பெருமானின் உயிர்த்தெழுந்த ஆற்றலும் கொள்ளப்படுமானால், இவ்வாற்றலுக்குச் சான்றாக இந்திரன் விளங்கிய நிலை விளக்கபபட வேண்டும்.

ஐந்தவித்தானும் இயேசுவின் உயிர்த்தெழுந்த ஆற்றலுக்கு, அகன்ற வானத்திலுள்ளவர்களின் தலைவனும் இந்திரன் சான்றான நிலை கிறித்தவர்களின் வேதத்திலே கூறப்பட்டுள்ளதா ?

## சான்று

இயேவிசுன் உயிர்த்தெழுந்த ஆற்றலுக்கு அகல் விசும்புளார் கோமான் சான்றாகும் நிலையை விவிலியம் கூறுவதாவது:- [ மத்தேயு. 28: 1 – 8 ].

"ஓய்வுநாளுக்குப்பின், வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில் மகதலேன் மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தனர். இதோ பெரிய நில நடுக்கம் உண்டாயிற்று. ஆண்டவரின் தூதர் வானினின்று இறங்கி வந்து, கல்லைப்புரட்டி, அதன் மேல் அமர்ந்தார். அவருடைய தோற்றம் மின்னல் போன்றும், உடை உறைபனி போல் வெண்மையாயும் இருந்தன. காவலர் அவரைக் கண்டு அஞ்சி நடுங்கிச் செத்தவர்போல் ஆயினர்.

வான தூதர் பெண்களை நோக்கி, "அஞ்சாதீர்கள்; சிலுவையில் அறையுண்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை; தாம் கூறியபடியே உயிர்த்துவிட்டார். வாருங்கள் ஆண்டவரைக் கிடத்திய இடத்தைப் பாருங்கள். விரைந்து செல்லுங்கள். அவர் இறந்தோரிடமிருந்து உயிர்த்துவிட்டார் என்று அவர் சீடருக்குச் சொல்லுங்கள். இதோ! உங்களுக்கு முன் அவர் கலிலேயாவுக்குப் போகிறார். அங்கே அவரைக் காண்பீர்கள். இதோ! உங்களுக்குச் சொல்லிவிட்டேன்', என்று சொன்னார். அவர்கள் அச்சத்துடனும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் விரைவாகக் கல்லறையை விட்டு அகன்று, அவருடைய சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள்.

இதைக் குறித்து நமது தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் கூறுவதாவது:—

"ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
எழுந்துயிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்
நேசமா மரியா மக்தலேனா
நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்"

சுதேச கீதங்கள். பக் 153.

இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை அகல்விசும்புளார் கோமானாகிய ஆண்டவரின் தூதர் மகதலேனா மரியாளுக்கும் உடன் சென்றவர்களுக்கும் அறிவிக்க, அதை நேரிலே கேட்ட, கண்ட மகதலேனா மரியாள் இயேசுவின் சீடர்களுக்கு அறிவிக்க, இயேசுவின் சீடர்கள், இதைக்கேட்டு, பின்னர், உயிர்த்தெழுந்த இயேசுவையும் நேரில் கண்டு, அதன்பின் உலகெங்கும் அறிவித்தார்கள்.

இயேசுவின் உயிர்த்தெழுந்த செய்தி உலகெங்கும் பரவுவதற்குக் காரணமாக உயிர்த்தெழுந்த செய்தியைக் குறித்து முதன் முதல்சாட்சி கொடுத்தவன் அகல்விசும்புளார் கோமானே. இது கதையன்று; புராணமுமன்று; வரலாறு. இன்று வரலாறு எழுதும் யாவருக்கும் அடிப்படையாய் விளங்கும், கி. மு; கி. பி; என்னும் அடிக் குறிப்பிற்கு ஆணிவேராய்க் கொள்ளப்படுவது இந் நிகழ்ச்சியே. ஆகவே ஐந்தவித்தானாக இயேசு கொள்ளப்பட்டால் ஐந்தவித்தானாகிய இயேசுவின் உயிர்த்தெழுந்த ஆற்றலுக்கு, அகல்விசும்புளார் கோமான் இந்திரனே சான்று என வரலாற்றுப் பொருத்தத்துடன் முடிவதை நாம் காணுகிறோம்.

ஐந்தவித்தானாற்றல் அகல்விசும்புளரர் கோமான் இந்திரனே சாலுங்கரி

ஐந்தவித்தானைப் பற்றிய வள்ளுவரின் கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால்:

1. அருவமாக விளங்கும் இறைவன் உருவமாகி ஐம்புலனுடன் மனிதனாகத் தோன்றினான்.

(ஐந்து)

2. அவன் தன் புலன் ஐந்தையும் மக்களுக் காகப் பலியுணவாக்கினான்.

(அவித்தான்)

3. அவன் அதைச் செய்ததற்கான சின்னம் ஒன்றுண்டு.

(பொறிவாயில்)

4. அவன் மக்களுக்குக் காட்டிய பொய்தீர் ஒழுக்க நெறி ஒன்றுண்டு.

(பொய்தீர் ஒழுக்க நெறி)

5. அவன் நெறியில்நின்றவர்களுக்கு நீடுவாழ்வு உண்டு.

(நின்றார் நீடு வாழ்வார்)

6. அவன் யாவரினும் சிறந்த ஆற்றலை (இறை யாற்றலை) வெளிக்காட்டினான்.

(ஐந்தவித்தானாற்றல்)

7. அவ்வாற்றலுக்குச் சான்று அகன்ற வானத்தி லுள்ளவர்களின் தலைவனாகிய இந்திரனே.

(அகல்விசும்புளார் கோமான் இந்திரனே சாலுங்கரி)

மேலே கண்டஏழு குறிப்புக்களையும் வெளிப் படுத்தும் ஐந்தவித்தான் யார்?

விடை கொடுக்கும் பொறுப்பு இனி உங்களுடையதே.

## ஆசிரியரின் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | திருவள்ளுவர் கிறித்தவரா ? | 3 50 |
| 2. | ஐந்தவித்தான் யார் ? | 1 00 |
| 3. | 'நீத்தார்' யார் ? | 1 00 |
| 4. | 'வான்' எது ? | 1 00 |
| 5. | சான்றோர் யார் ? | அச்சில் |
| 6. | இருள்சேர் இருவினை எவை ? | ,, |
| 7. | இன்பத்துப்பால் ஏன் ? | ,, |
| 8. | புலால் மறுத்தல் சைவமா ? | ,, |

* * *

### கிடைக்குமிடங்கள் :

**மெய்ப்பொருள் பதிப்பகம்,**
*2-A, அப்பாத்துரை நாய்க்கர் தெரு,*
*சென்னை-23.*

**பாரி நிலையம்,**
*பிராட்வே, சென்னை-1.*

**சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,**
*பிராட்வே, சென்னை-1.*
*திருநெல்வேலி-6. மதுரை-1. கோவை-1.*

**நல்லாயன் பண்ணை,**
*அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1*

**கிறித்தவ இலக்கிய சங்கம்,**
*பார்க் டவுன், சென்னை-3.*

**தமிழ் இலக்கியக் கழகம் [T. L. S.]**
*திருச்சி - 1.*